www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE, FRANCE

THENEE

# தேனீ

புரட்டாசி - ஐப்பசி 1990.



எந்தப் பெயரில்
எதற்காக
போர்க்குதிரையின் குளம்படிகள்
நகரங்களை செவிடாக்குகின்றன?
போர்க்களமென்றும் வானத்தில்
எது இருக்கிறது?
என்ன தெரிகிறது?
விடுதலையா? கடவுளா?
பணம்.
நீ உயிரிழப்பதைத்தான் - அவர்கள
தியாகம் என்று சொல்லித் திரிகிறார்கள்.
நீ என்றைக்கு
உன் முழுவலிமையோடு நிமிர்ந்தெழுந்து
அவர்கள் முகத்தில் அறைந்தாற்போல்
இந்தக் கேள்வியைக் கேட்கப்போகிறாய்.
"ஏன் நாங்கள்
பாரிட்டுக்
கொண்டிருக்கிறோம்?"

ரஷ்யக்கவிஞர் மாயாகவல்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கொலைகளை நிறுத்துங்கள்.



என் பாசத்திற்குரிய பிள்ளைகளே!
சொல்லுங்கள்.
தாய் நான்,
இன்னும் மௌனமாய் இருப்பதெப்படி?

இரவுகளில் துயிலின்றியும்,
நான் முழுவதும் பசித்திருந்தும்,
வாழ்வில் எழுந்து நின்ற தடைகளினுள்ளும்,
நான் வளர்த்த
எனது
மகளையோ
மகனையோ
ஒரு சிறு வயதுக் குறும்புச் சண்டையின் பின்
பாசம் மின்னும் விழிகளினால்
என்னைப் பார்த்துச் சிரித்த
என் குழந்தையையோ தான்,
நிணம் தின்னும் இன்றைய பொழுதுகளில்
நான்
பலி கொடுத்திருக்கிறேன்.
இப்பொழுது
இங்கே இருப்பது
அவர்களது
நிணமும் குருதியும் மாத்திரமே.


இன்று
கிராமங்களிலும் நகரங்களிலும்
வீதிகளிலும் ஆறுகளிலும்
பெருக்கெடுத்தோடுவது
அன்று
என் பிள்ளையை அணைத்து
தாய்ப்பால் கொடுக்கையில்
என் நரம்புகளினால் ஓடிய குருதியே.

நீ வைத்திருக்கும் ஆயுதம்
என்ன ரகம் என்றோ
உனக்கிருக்கும் அதிகாரம் பற்றியோ
எனக்கு அக்கறையில்லை.

ஆனால்,
அன்னையொருத்தி
உதிரஞ் சிந்தி
உருவாக்கும் ஜீவனொன்றை
அழிப்பதற்கு
உனக்கு
அதிகாரம் தந்தது யார்?
ஆயுதங்கள் தந்தது யார்?



கொஞ்சம் நின்று,
உன் தாயின் அழுகைக்குச் செவி கொடு.
கொலையும்,
வெறுப்பும்,
அச்சமும் சூழும்
இந்த
முடிவில்லா நிகழ்வுக்கு
முற்றுப்புள்ளி வைத்து விடு.
தீர்வொன்றை வேண்டி
கொலைகளை நிறுத்துங்கள்
இப்பொழுதே
கொலைகளை நிறுத்துங்கள்.



**"தாய்மண்ணின் தாயும் மகளும்" அமைப்பினால் வெளியிடப்பட்ட கவிதை.**

www.tamilarangam.net

# துயரக்கடல்

யாழ்குடாநாட்டின் பல்வேறு கன்னியர் மடங்களைச் சேர்ந்த சகோதரிகள், கில்ரரபெல், ரீனாராசையா, எம்.வசந்தா, தெரேசா, ஆனந்தபிள்ளை, பற்றீசியா, ராஜேஸ்வரி, அந்தோனியா மற்றும் சகோதரி மேரியா ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்திருக்கும் கடிதம் இது.

## சாட்சிகளாக நாம்

யாழ்ப்பாணத்திலுள்ள திருக்குடும்பம், நல்லாயர், அப்போஸ்தலிக் காமல், திருச்சிலுவை ஆகியவற்றைச் சேர்ந்த பெண்கள் ஒன்றியத்தின் நானூறுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களின் பிரதிநிதிகளாக நாம், யுத்த களமாகியுள்ள யாழ்ப்பாணத்தின் நிகழ்ச்சிகளுக்கு சாட்சிகளாக உள்ளவர்கள் என்ற முறையில் அதன் உண்மை நிலை பற்றியஒரு சித்திரத்தை உங்களுக்குத்தர விரும்புகிறோம். யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருக்கும்எமது சகோதர சகோதரிகளுக்கு இத்தகைய ஒரு சாட்சியம் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகுமென நாம் நம்புகிறோம். நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம், புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலானது என்றும் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் சொல்லப்பட்ட போதும், உண்மையில் இது மக்களுக்கு எதிராகவே முடக்கிவிடப்பட்டுள்ளது. யாழ் கோட்டையிலிருந்து 1 1/2 கிலோ மீற்றர் தூரத்தில் வசிக்கின்ற தொடர்ச்சியான பயங்கர அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிற நாமே இதற்கு நேரடிச் சாட்சியாக உள்ளோம்.

## புலப்படாத கொலைகள்

ஜூன் 16ல் யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றிக் கோட்டையிலிருந்து வீசப்பட்ட ஷெல் குண்டுகளும் நகர் முழுவதும் துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்த ஹெலிகப்டர்களும் எமக்கு திகிலேற்படுத்தியபோது மூன்று மாத காலமாக நிலவிவந்த ஒப்பிட்டளவிலான அமைதி முடிவுக்கு வந்தது. தெற்கிலே தரை மார்க்கமாக வந்து ஜே.வி.பியினருடன் மோதியது போலல்லாமல் வடக்கிலோ ஒன்றில் கோட்டைக்குள் இருந்து கொண்டோ, ஆகாயத்திலிருந்தோ ஊகத்தின் பேரிலும் சந்தேகத்தின் பேரிலும் பல இடங்களையும் தாக்கத் தொடங்கினர். தரைமார்க்கமான தாக்குதல் ஷெல் வடிவில் பலாலி, யாழ் கோட்டை, காரைநகர் ஆகிய முகாம்களிலிருந்து வந்தது. பலாலியிலிருந்து வீசப்படும் ஆட்டிலோறி ஷெல்லானது 15 கிமீ தூரத்திலுள்ள குருநகரில் வந்து விழுகிறது. காரைநகரில் நங்கூரமிட்டிருக்கும் Gun boats இலிருந்து ஏவப்படும் ஷெல்கள், யாழ்ப்பாணத்திற்கு வெளியே உள்ள அனைத்துத் தீவுகளிலும் விழுகிறது.

## இரவும் பகலும்

பிரதான தாக்குதலான விமானத் தாக்குதல் இரவு பகல் என்றில்லாமல் எல்லா நேரங்களிலும் நடக்கிறது. ஹெலிகப்டர்கள்,பொம்பர்கள், "அவ்ரோ"விமானங்கள் இறுதியாக நான்கு என்ஜின்களை கொண்ட Cargo plane என்பவற்றை வானில் நாம் காணக்கூடியதாகவுள்ளது. அவை எப்போதும் சோடிகளாகவோ அல்லது இன்னும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகமாகவோ வரும். ஆறு முதல் ஒன்பதுவரை விமானங்கள் ஒன்றாக வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. (யூன் 25, 29. யூலை 16, 22, 30 ஓகஸ்ட் 5,6 ஆகிய திகதிகளை உதாரணமாக சொல்லாம்.) இரவில் அவற்றை எம்மால் காணமுடியாத போதும் நகரின் இருளுக்குள்ளே ஒளிப்பிழம்பையும் குண்டுகளையும் வீசும்.

## குறி தவறிய இலக்குகள்

ஹெலிகப்டர்கள் அதிவேக துப்பாக்கிச் சன்னங்களைப் பொழிவதுடன் சிறிய பெற்றோல் குண்டுகளையும் போடுகின்றன. பொம்பர்களைப் பொறுத்தளவில் அவற்றிற்கு வழிகாட்டும் ஹெலிகப்டர்களிலிருந்து அறிவுறுத்தல்களும் உத்தரவுகளும் வழங்கப்படுகின்றன. ( இவற்றை எம்மால் F.M. அலைவரிசையில், ரேடியோவில் கேட்கக் கூடியதாகவுள்ளது) குண்டுகளை போடுமுன் பொம்பர் பிளேன்கள் தாழ்வாக நீந்தும். அப்போது நாம் பங்கருக்குள் ஒழிந்து கொள்வோம். சீனத் தயாரிப்பான Cargo plane கள் கம்பீரமாக வட்டமிட்டபடி 300 Kg நிறையுள்ள குண்டுகளை சாதரணமாக போடுகின்றன. அத்துடன் இவை ஒரு தடவை வரும் போது 7 முதல் 8 குண்டுகள் வரை தனக்கு விருப்பமானபடி போட்டு விட்டுச் செல்கிறது. அவை போடப்படும் போது- 3000 முதல் 3500 மீற்றர் உயரத்திலிருந்து போடப்படுகின்றன- மிகச் சிறிதாக தோன்றிய போதும், விழும் போது அப்பிரதேசம் முழுவதும் செந்நிறப் புகையை கிளப்பியபடி காது செவ1டுபடும் சத்ததுடன் வெடிக்கின்றன.

ஒவ்வொரு குண்டும் குறைந்த பட்சம் 10 வீடுகளை நிர்முலமாக்குகிறது. 20 வீடுகளை பல்வேறு முறைகளில் சேதப்படுத்துகிறது. இது மிகவும் உயர்ந்து பறப்பதுடன் இலக்குகளிலிருந்து பல தூரத்திற்கு அப்பால் தனது குண்டுகளைப் போடுகிறது. முற்றாக இருளில் மூழ்கியிருக்கும் குடாநாட்டின் மீது வெளிச்சமில்லாத விமானத்திலிருந்து நடாத்தப்படும் தாக்குதலே மிகப்பெருமளவு துயரத்தையும் அச்சத்தையும் தருவனவாகும்.

## இழிமையிலும் கீழாக

யூலை 19 ம் திகதி பேராயர் இல்லம், சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ் ஆயர் ஆலயம், தொடர்பகம் (OMI வதிவிடம்) ஆகியவை அமைந்துள்ள இடத்தின் மீது ஒரு புதுவடிவிலான "குண்டு" வீசப்பட்டது. இக்குண்டுகள் ஒயில்ரின்கள் மற்றும் பைபர் கான் (fiber can) களில் அடைக்கப்பட்ட அழுக்குகள், மனித கழிவுகள், பழுதான தூர்நாற்ற எண்ணெய்கள் முதலியவை. இவை பயங்கர நோய்களை பரவ வைக்கும் கிருமிகளைக் கொண்டவையா என்ற அச்சம் பரவலாக நிலவுகிறது.

எவற்றைத் தாக்குவது எனத் தீர்மானிப்பது யார்? துரதிர்ஷடவசமாக FM அலைவரிசையில் விமானிகள் உரையாடல்களை கேட்கிற போது எவ்வளவு தான்தோன்றித் தனமாக எங்கே குண்டு போடுவதென்பதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள் என அறிய முடிகிறது. இந்த தீர்மானங்கள் எம்மை திடுக்கிட வைக்கின்றன.

(உ+ம்)

1. ஒன்று மீதியாக உள்ளது. என்ன செய்ய? (எக்கத் தியனவா மே மொனவாத கறன்னே?) எங்காவது போடு (கொத்தன ஹரி தான்ட)

2. ஒரு குண்டு போடப்பட்ட பின்னர் ஒருவர் ஆத்திரத்துடன் அது ஒரு தேவாலயத்தின் மீது விழுந்ததாக சொன்னார். அதற்கு மற்றவர் சொல்கிறார், போட்டாச்சு. இனி ஒன்றும் செய்ய ஏலாது. (யக்கோ தேவல்தானய நேத. கறண்ட தெயக் நா தால இவறாய்)

3. "தாக்குதல் முடிந்தது. தளத்துக்குத் திருப்பு" என்று சொல்லி ஒரு நிமிடத்தில் ஹெலிகப்டர் மக்கள் மீது சன்னங்களைப் பொழியத் தொடங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதிலிருந்து ஒன்று தெரிகிறது. குண்டுகளைப் போடுபவர்கள் மேலதிகாரிகளின் முன்கூட்டியே திட்டத்துடன் வருவதில்லை. விமானிகள் ஒரு குறிப்பிட்ட இலக்கு பற்றிய நோக்குடன் விமானம் ஓட்டுவதும் இல்லை.

## உயிர், சேவை மற்றும் சொத்து அழிவுகள்

ஆயிரக்கணக்கில் அழிக்கப்பட்ட வீடுகள், கடைகள் என்பவற்றிற்குப் புறம்பாக அழிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் விபரங்களை நாம் தர விரும்புகிறோம்.

## அத்தியாவசிய சேவைகள்

### வைத்திய சாலைகள்

யாழ் ஆஸ்பத்திரியின் பல வார்ட்டுகள், மானிப்பாய் ஆஸ்பத்திரி, பிலிப் மருத்துவமனை யாழ்ப்பாணம், பல தனியார் வைத்திய நிலையங்கள், மருத்துவக் கடைகள், ஆய்வுக்கூடங்கள் சுன்னாகம் மின் நிலையம், யாழ் பஸ் நிலையம், யாழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ் மனித முன்னேற்றச் சங்கம் (HUNDEL), யாழ் சந்தை, திருநெல்வேலிச் சந்தை, சாவகச்சேரிச் சந்தை.

### வழிபடுதலங்கள்

1. O.L.R தேவாலயம்,
யாழ்ப்பாணம்.
2. சென் ஜேம்ஸ் தேவாலயம்.
குருநகர்.
3. அற்புத மாதா தேவாலயம்
குருநகர்.
4. செனற். மேரி கதீட்ரல் தேவாலயம் ,யாழ்ப்பாணம்
5. ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்திற்கு வெளியே

பலாலி, மயிலிட்டி, வசாவிளான், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் பல தேவாலயங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கன்னியர்மடம் தாக்கப்பட்டது.

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம். (Bienvenu)

பகுதியாக பாதிக்கப்பட்ட கன்னியர் மடங்கள்.

1. திருக்குடும்ப மாகாண தலைமையகம்.
2. யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்.
3. திருச் சிலுவை நோயகம், குருநகர்.
4. வயோதிபர் இல்லம், கொழும்புத்துறை.

யாழ்ப்பாணத்திற்கு வெளியே

அப்போஸ்தலிக் கார்மேல் கன்னியர் மடம், அடம்பன்.

புனித யோசப் கன்னியர் மடம், மயிலிட்டி.

திருக்குடும்ப கன்னியர் மடங்கள். மயிலிட்டி, ஊர்காவற்றுறை, பரப்பாங்கண்டல், நானாட்டான், உருத்திரபுரம்.

நல்லாயன் மடம், மாங்குளம்.

பாவிக்கப்பட முடியாத வகையில் கைவிடப்பட்டவை:

திருக்குடும்ப கன்னியர் மடம், திருநெல்வேலி.

## தாக்கப்பட்ட அகதி முகாம்கள்

புனித யோசப் மகாவித்தியாலம், கொழும்புத்துறை.

புனித அந்தோனியர் மகளிர் மகாவித்தியாலயம். பாஷையூர்.

புனித பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## நிர்மூலமாக்கப்பட்ட வங்கிகள்

தேசிய சேமிப்பு வங்கி, பல மக்கள் வங்கிக் கிளைகள்

## எமது தலைவிதியும் வாழ்வும்

இந்த யுத்தத்தின் பயனாக நாம் மனோரீதியாக, சரீரரீதியாக, பொருளாதார ரீதியாக, ஆத்ம ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது இரவுகள் இருள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மயமாக இருப்பது மினசாரம் இல்லாதோ அலலது இருந்த ஒரேயொரு சுன்னாகம் மின்நிலையமும் தகர்க்கப்பட்டதோ காரணமாக மட்டுமல்ல, ஒரு மின்னுகிற வெளிச்சத்திலேனும் நாம் குண்டுகளுக்கு இலக்காகி விடுவோமோ என்ற அச்சத்திலுமேயாகும். சகிக்க முடியாத அசுவாத்திய நிலையிலும் நாம் எமது நேரத்தில் பெருமளவை பங்கருக்குள்ளும், மதவுகளுக்குள்ளும், பாலங்களின் கீழும் கழிக்கிறோம். பலர் தமது வீடுகளின் கூரைகளை இழந்துள்ளார்கள். மழை நாட்களில் வீடுகளும் பங்கர்களும் வெள்ளத்துள் மூழ்குகின்றன. இயலாத, பங்கருக்குள் வரமுடியாத வயோதிபர்கள் பங்கருக்குள் இருப்பவர்களது மனதில் பெரும் அச்சத்தையும் கழிவிரக்கத்தையும் ஊட்டுகின்றனர். தமது வளவுகளிலே பங்கர்கள் இருந்த போதும் பரவலாக நடக்கும் தாக்குதலால் முகாம் விட்டு முகாம் மாற வேண்டியிருப்பதால் அவற்றை பாவிக்கவும் முடிவதிலலை. பலர் அகதி முகாமிலேயே குண்டுகட்குப் பலியாகி உள்ளனா எந்த இடமும் எந்த நேரமும் எமக்கு பாதுகாப்பாக கருத முடியாது. பட்டினி பலரை தற்கொலைக்கு தூண்டுகிறது. சிலர் ஏற்கனவே தற்கொலை செய்தும் விட்டார்கள், சுகயீனமுற்றவர்கள், காயமுற்றவர்கள் ஆகியோருக்கு வைத்தியசாலையும் கிடையாது. போக்குவரத்து வசதியில்லை. மருந்துகள் கிடையாது. சுருக்கமாகச் சொன்னால் நாம் எமது அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், பாதுகாப்பு என்பவற்றிற்கான தேவையை எம்மால் நிறைவு செய்ய முடியவில்லை. பல கன்னியர் மடங்களை ஒன்றில் அவை உடைக்கப்பட்டதாலோ அல்லது அங்கிருப்பது பாதுகாப்பற்ற அச்சம் தருகின்ற ஒன்றாகவோ இருப்பதாலோ நாம் மூடி விட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

ஒப்பீட்டளவில் பாதுகாப்பான இடங்களுக்குச் சகோதரிகள் மாற்றப்பட்டுள்ளார்கள்.

சகோதரிகள் தமதுநாளந்த பிராத்தனையை கூட செய்ய முடியவில்லை. சுற்றி வரப் பார்ப்பதும் அவற்றை தெரிவிப்பதுமே இன்றைய மிக உயர்ந்த வழிபாடாக உள்ளது எமக்கு.

இத்தகைய நிலமையின் கீழான எமது வாழ்க்கை உண்மையில் அற்புதம் தான். அமைதியாக கவலைப்படுவது தான் எமது நாளாந்த அனுபவமாக இருந்து வந்தது. ஆனால் இப்போது நாம் எமது எல்லைலையை அடைந்துவிட்டதால் சகோதரிகளாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ள நாம் பலத்து அழுவது தேவையாக உள்ளது. இந்த அழுகை வெறும் காட்டுக்குள் அழுத அழுகையாக இல்லாமல் உங்களது உள்ளத்தில் எம் சார்பாக எதிரொலித்து ஏதாவது நடைமுறைக்கான சிந்தனகளை தோற்றுவிக்கும் என நம்புகிறோம். நன்றி- 'சரிநிகர்'

## கு.குகமூர்த்தி....



இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இய்க்கத்தின்(MIRJE) தேசியக் குழு உறுப்பினரும் மனித உரிமைகள்வாதியுமான குகமூர்த்தி அவர்கள், வேலைத்தளமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளார். உலகம் முழுவதும் இயங்கும் மனித உரிமைக் குழுக்களும், இலங்கையின் பல முற்போக்கு அமைப்புகளும் அவரை விடுதலை செய்யுமாறு அரசைக் கோரியுள்ளன!

கருத்துச் சுதந்திரம் எல்லாவகையில் நசப்பட்டிருக்கும் இலங்கையில் துணிந்து மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பவர்களையும் பாடுபடுபவர்களையும் காணாமல் போகப்பண்ணுகிற ஆயுத கலாச்சாரம் பல மனித உரிமை வாதிகளைப் பலியெடுத்துள்ளது.

குகமூர்த்தியை விடுவிக்குமாறு குரல் கொடுக்கும் அனைத்து மனித உரிமைகள் அமைப்புகளுடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தம், அழிவு, மக்கள்...

தமிழ் மக்களுக்கெதிரானது அல்ல என்று இலங்கையரசும், தமிழ் மக்களின் போராட்டம் என்று புலிகளின் தலைமையும் கூறி வருகின்ற யுத்தத்திற்கு அஞ்சி குறிப்பாக யாழ் குடநாட்டிலிருந்து பெருந்தொகையான மக்களின் வெளியேற்றம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வெளியேறுபவர்களில் பலர் கடல்வழியாக இந்தியாவிற்கும் பலர் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பிற்குமாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள் இந்தப் பிராயாணங்கள் யாவும் மரணத்துடன் எவ்வளவு பெரிய நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்பதற்கு கடற்படைகளினால் வைக்கப்படும் கடற் கண்ணிவெடிகளில் தப்பிச் செல்லும் அப்பாவி மக்கள் பிராயாணம் செய்யும் படகுகள் நிர்மூலமாக்கப்படுவதும் வாகனங்கங்கள் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்படுவதும் பெருந்தொகையான யுவதிகளும் இளைஞர்களும் கைது செய்யப்படுவதும் நாள்தோறும் நடைபெற்று வரும் உதாரணங்கள்.

வேறுவழியின்றி தொடர்ந்தும் அகதி முகாம்களிலேயே தங்கியிருக்கும் அகதிகளும் , புலிகளுக்கு வரிகளை பணமாகவோ நகைகளோ கொடுத்து விட்டு வெளியேற வசதியில்லாதவர்களும் தொடர்ந்தும் யுத்த சூழ்நிலையில் வாழ்வைக் கழிக்கின்றனர்(எல்லோரும் வெளியேறி விட்டால் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் யார் காவல்??) இப்பொழுது மீண்டும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் மோதல்களில் அகதிமுகாம்களும் அகதி முகாங்களாக உள்ள அதிகமான கோயில்களும் தாக்கியழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பது இந்த மக்கள் தான்.

அதேபோல்-

கிழக்கு மாகாணம் மீண்டும் வழமைபோல் சத்தமின்றி வேட்டையாடப் பட்டுக்கொண்டிருக்கின்றது." ஊர்காவல்" படைகளின் வெறித்தனத் தனமான கொலைகளிற்கும் பொலிஸாரின் கைதுகளிற்கும் மறு புறத்தில் சொந்த இடங்களில் இல்லாமல் மாறி மாறி நேரத்திற்கொரு இடமாக உயிருக்குப் பயந்து அலைந்து கொண்டிருக்கும் அகதி வாழ்விற்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். மரண பீதியுடனேயே அங்கு நாட்கள் நகர்கின்றன. இப்பகுதிகளில் சில இடங்களில் தற்காலிக அமைதி ஏற்பட்டிருந்தாலும் எதையுமே உத்தரவாதப்படுத்த முடியாத அச்சுறுத்தப்பட்ட பிரதேசமாகவே கிழக்கு மாகாணம் இருந்து வருகின்றது.

வடக்கைப்போலவே கிழக்கிலும் அகதி முகாம்களிற்கான உணவு,மருந்துப் பொருட்கள் முறையாகப் போய்ச் சேரவில்லை என்பதும் குழந்தைகள் உணவுப் பொருட்கள் இல்லாமையால் இறக்கும் தருவாயில் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இந்த நிமிடம் வரை நடை பெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளாகும்.

(9ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரீங்காரம்

அன்பானவர்களுக்குத் தேனீயின் அன்பான வணக்ககங்கள்.

உரிமைகளை இழந்து, தேசிய ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்துக்கொண்டு துயர்மிக்க பாதைகளுகளினூடாகவே அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் வாழும் மண்ணில் மீண்டும் திணிக்கப்பட்டுள்ளது யுத்தம்.

யார் இப்பொழுது இதை முதலில் தொடங்கியது என்ற கேள்வி இப்பொழுது அவசியமில்லாதது. ஏனெனில் சிறிலங்கா அரசிற்கும் புலிகளின் தலைமைக்கும் நிச்சயமாய் இலாபம் தரக்கூடிய வகையிலேயே இந்த யுத்தம் அமைந்துள்ளது. இது தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான யுத்தம் எனப் போலியாகக் காட்டுவதற்காக இரு பகுதிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட பிரயத்தனங்களைச் சமீபகால நிகழ்வுகளின் போது தெளிவாகக் கண்டு கொள்ளக் கூடியதாகவிருந்தது. அது மாத்திரமின்றித் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே இனக்கலவரங்களை உருவாக்கிக் குளிர்காயவும் சகல தரப்புகளிலும் உள்ள சில இனவாதசக்திகள் இந்தச்சந்தர்ப்பத்தில் முயற்சியெடுத்தன. இவற்றின் கோரவிளைவாக கிழக்கு மண்ணில் இடம்பெற்ற அப்பாவி முஸ்லிம் மக்களின் கொலைகளும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற அப்பாவித்தமிழ் மக்களின் படுகொலைகளும் நிகழ்ந்து முடிந்தன.

அரசு தனது வழமையான இனவொடுக்கு முறை அரசியலிற்காகவும், புலிகள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுத் தொடரப்பட்ட இந்த யுத்தத்தின் போது இலட்சக் கணக்கில் அகதிகளாக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் உயிர்களை இழந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் கோவில்களிலும் பட்டினியுடன் போராடியது மத்திரமல்லாமல் விமானத்தாக்குதல்களுக்கும் பலியாகிக் கொண்டுமிருக்கும் எமது மக்களின் அவல வாழ்வே இந்த யுத்தத்தின் குரூரமான பக்கங்களாக இருக்கின்றன.

இந்த யுத்தமானது வேறு யார் மீதோ அல்ல சாதாரண தமிழ் பேசும்

மறுபுறத்தில்,

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனரீதியிலான, இராணுவ ரீதியிலான ஒடுக்கு முறையை புலிகளின் தலைமையானது தனக்குச்சாதகமாகப் பாவித்து வருகிறது. அரச ஒடுக்கு முறைக்கெதிராக ஆயுதமேந்தும் ஆயிரக்கணக்கணக்கான இளைஞர்களை தனது தலைமையை நிலை நிறுத்திக் கொள்வதற்காக தவறான பாதையில் வழிநடத்தி பலிகொடுத்து வருவதோடு தொடர்ந்தும் தம்மை நிலைநிறுத்திக்கொள்வதற்காக போர்க்காலங்களையே நம்பியிருக்கின்றது. புலிகள் தம்மைத் தமிழ் தேசிய உணர்வின் தற்போதய "குறியீடாக" காட்டிக்கொள்வதன் மூலம் உருவாக்கியிருக்கும் மாயைக்குப்பின்னால் தமிழ்பேசும் மக்களின் விடுதலையையோ அல்லது அதை நோக்கிய சிறிய நகர்வுகள் ஏற்படுவதையோ மிக்குரூரமான முறையில் நசுக்கப்போகும் பிற்போக்குத்தனமான அரசியலொன்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் புலிகளின் தலைமையின் குணாம்சம் மறைந்திருக்கின்றது. இன ஒடுக்குமுறைக்கும் அராஜகத்தால் உருவாகியிருக்கும் சிந்திக்க முடியாத நிலையிலிருந்து கொண்டிருக்கும் சாதாரண தமிழ் பேசும் மக்களின் முன் இந்த மாயையே விஸ்ரூபமாக இருக்கின்றது. இந்த மாயை உடனடியாக விலகுவதற்கான சாத்தியக் கூறுகளும் குறைவாகவேயுள்ளன(இதற்கான நடவடிக்கைகளை கருத்துரீதியாக முன்னெடுக்கக்கூடிய வகையிலான நிலைமை தற்போது கொஞ்சம் கூட இல்லை என்பதுடன் இது நிகழ்காலத்தின் பெரிய சாபக்கேடாகவும் குரலற்ற மக்களின் பலவீனமாகவும் உள்ள கருத்துச் சுதந்திரமற்ற நிலையை மாற்றியமைப்பதுடன் கட்டியெழுப்புவதுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. குறுகிய தேசியக் கண்ணோட்டத்துடன் பிரச்சனைகளைப் பார்க்கும் சக்திகள், ஏனைய தமிழ் விடுதலைக்குழுக்கள்,தூய்மைவாதிகள் ஆகியோர் இத்தகைய முன்னெடுப்புக்களை எந்த வகையிலும் செய்ய முடியாத கையாலாகா நிலைமையிலே இருக்கின்றன.) புலிகளின்களின் தலைமை ஆயுத சூழ்நிலைமைகளை விரும்புவதற்கும் இந்த மாயைக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

எது எப்படியிருப்பினும், அரசின் குணாதிசயம் தமிழ் பேசும் மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தினாலும் புலிகளின் தலைமைக்குச் சாதகமாகிப்போனதும் புலிகளின் குணாதிசயம் அரசின் அரசியலைத் தொடர்வதற்குச் சாதகமாகிப் போனதுவுமே உண்மையாகும். இந்த உண்மையானது தற்போதய நிலைமைகளில் எவ்வளவு பெரிய பங்கை

www.tamilarangam.net

மக்கள் மீதான ஒடுக்கு முறைகளையுமே கட்டவிழ்த்துள்ளது.

இந்த நிமிடம் வரை இந்த யுத்தத்தினால் பலியெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் பாதிக்கப்பட்டுக் கொண்டுமிருப்பதும் அப்பாவிப் பொது மக்களே.

தமிழ் மக்களினது சுயநிர்ணய உரிமையை இன்றுவரை அங்கிகரிக்க மறுத்து, தனது இனவாத அரசியலை தமிழ் பேசும் மக்களுக்கெதிராகக் கடைப்பிடித்துவரும் அரசானது இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செயற்படவில்லையென்பதை அப்பாவி மக்கள் மீது மிலேச்சத்தனமாக ஆகாய,தரை மார்க்கங்களாக நடாத்திய இராணுத்தாக்குதல்களின் போதும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு,மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதில் காட்டிய பாராபட்சத்திலிருந்தும் காணக்கூடியதாகவிருந்தது.

நிராயுதபாணிகளான மக்களைக் கேடயங்களாகப் பாவித்து இராணுவத்தினரைத் தாக்குவதும் பதிலுக்கு இராணுவம் வெறித்தனமாகத் தாக்கி மக்கள் கொல்லப்படும் பொழுது தாம் மூர்க்கத்தனமாக தமது நலன்களுக்காக மேற்கொள்ளும் யுத்தத்தை மக்கள் சார்பானது என்று காட்டிக்கொள்வதும் என, இந்தியப்படைகள் இருந்த போதும் தற்போதய யுத்தத்தின்போதும் புலிகளின் "தந்திரோபாய"த்தில் எந்தவிதமான மாற்றமுமில்லை.

தொடரும் காலங்களில் தமிழ்பேசும் மக்கள் எத்தகைய சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கப்போகிறார்கள்?

சிறிலங்காவரசு தனது நலன்களினடிப்படையில் தொடர்ந்தும் தனது இனவாத அரசியலையே நடாத்தப் போகிறது. இதனடிப்படையில் தமிழ் மக்களுக் கெதிரான இனவொழிப்பு நடவடிக்கைகளும் கூர்மையாக்கப்படும். வடகிழக்குத்தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கூட தனது பாசிச இராணுவ அடக்கு முறைகளை படரவிட்டு தன்னை முழு இலங்கை மக்களின் பொது எதிரியாக இனங்காட்டியிருக்கும் இவ்வரசிற்கு தமிழ் சிங்கள மக்களிடேயேயான இன முரண்பாட்டை பேண வேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது. இந்த மாயையைத் தேசிய வாதம் என்ற போர்வையில் சிங்கள மக்கள் மத்தியில் கூர்மைப்பபடுத்தியதை தற்போது நடைபெறும் யுத்தத்திலும் காணக்கூடியதாகவிருக்கினறது.

www.tamilarangam.net

வகிக்கின்றது, வகிக்கப்போகின்றது என்பது கவனிக்கத்தக்கது. யுத்தம் உட்பட அனைத்துப் பிரதி விளைவுகளும் இந்த அடிப்படையிலேயே உருவானவை.

மக்களின் நலனுடன் எந்த வகையிலும் சம்பந்தமற்ற இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையைக்கூட அரசிற்கெதிரான பலமான குரலாக ஒலிக்கக் கூடிய வகையில் செய்ய முடியாமல் இருக்கும் பலவீனத்தின் பின்னால் இருக்கும் அரசிற்கெதிரான அணிகளின் வர்க்கக் குணாம்சங்கள், முழு இலங்கை என்ற ரீதியில் நிலைமைகளை நோக்காத அவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தான் நாம் எமது தேசத்தின் இன்றைய துரதிர்ஷ்ட நிலையை நோக்க வேண்டும்.

தேனீக்கள்

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

*கிழக்கு மாகாணத்தில் புலிகளினால் போடப்பட்டிருக்கும் நிர்வாகத்தடை கிடைக்கும் கொஞ்ச அவகாசத்தில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.*

*வடக்கு கிழக்கு இத்தகைய யதார்த்தத்தில் இருக்கையில் அங்குள்ள உண்மையான நிலைமைகள் பற்றி சர்வதேச ரீதியாக எந்தளவிற்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளன?*

*அரபு நாடொன்றில் பத்துப் பேர் கொல்லப்படும் பொழுதும் கிழக்கைரோப்பிய நாடுகளில் இருவர் கைது செய்யப்படும் பொழுதும் தலைப்புச் செய்தியாக வெளியிடும் தொலைத் தொடர்பு சாதனங்களிலும் பத்திரிகைகளிலும் ஒரு நாளிற்கு சுமார் 40 பொது மக்கள் என்ற வீதத்தில் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை இடம் பெறுவது மிகக்குறைவு.*

*சகல விதமாகவும் அடக்கப்பட்டுள்ள எமது மக்களின் குரலை சர்வதேச ரீதியாகத் தெரியப்படுத்தாதது எமது பின்னடைவுகளில் இன்னுமொன்றாகும்.*

*இந்த நிலை இன்னமும் தொடர வேண்டுமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.*

*- காளிதாஸ்.*

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

இரண்டாவது வருட பூர்த்தியை நிறைவு செய்து 3வது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் இலக்கியச் சந்திப்பின் 9 வது தொடர் ஆலன் நகரில் செப்டெம்பர் 29,30 ஆந் திகதிகளில் நடைபெற்றது.

ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், வாசகர்களின் கலந்துரையாடல்கள், நிகழ்ச்சிகள் ஆரம்பமாகு முன்னரே ஆங்காங்கே ஆரம்பித்து விட்ட முதல்நாள் காலைப் பொழுதைப் பார்த்த பொழுது, இவ்வளவு ஆர்வமுள்ள மனிதர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்த இந்த இரண்டு நாட்கள் போதுமா என்ற கேள்வி என் மனதில் தவிர்க்க முடியாதவாறு எழுந்து விட்டிருந்தது.

மலையக மக்கள் மத்தியில் துளிர் விட்டு இலங்கையில் பரிச்சயமான முற்போக்கு எழுத்தினை உருவாக்கிய எழுத்தாளர் இராமையாவின் மறைவுக்கு இரண்டு நிமிட அஞ்சலி செலுத்திய பின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. சிறுவர் அமுதம், வெகுஜனம், ஏலையா, தூண்டில், புதுமை, சிந்தனை, அக்னி, தளிர், நமதுகுரல், மனிதம், தேனீ ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், வாசகர்கள் இந்த இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டார்கள்.

### வாசகர் விமர்சனம்

ஆசிரியர்கள், ஆக்கதாரர்களின் சிந்தனை நிலையிலிருந்து வேறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்ட வாசகர்கள்தான் பத்திரிகைகளின் ஜீவாதாரம். இவர்களது ஆரோக்கியமான விமர்சனங்கள் பத்திரிகைகளை நெறிப்படுத்துகின்றன. இந்த வரிசையில் சிறுவர்அமுதம், அக்னி, மண், சிந்தனை, புதுமை, ஏலையா, துண்டில் ஆகிய பத்திரிகைகள் விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டன.

ஆரோக்கியமான விமர்சனம் என்ற நிலையிலிருந்து விலகி இனவாத ரீதியான சேறடிப்புகளை(உ+ம் வெள்ளைத்தோல் போன்ற சொற்பதங்கள்) ஒருவர் விமர்சனம் என்ற பெயரில் செய்ததானது பலர் மனங்களில் கசப்புணர்வை ஏற்படுத்தியது.

இது சம்பந்தமாக; "மனிதாபிமான கண்ணோட்டத்தோடு தான் ஒருவர் சமூகத்தை நோக்க வேண்டும், மனிதாபிமானற்ற தனிமனித சேறடிப்புகள் தவிர்க்கப்படவேண்டும்" என சுசீந்திரன் கூறிய கருத்து பொருத்தமானதாகும்.

ஆசிரியர், ஆக்கதார் பதில்கள் பகுதியில் தூண்டில், புதுமை, சிந்தனை சார்பில் பதில்களளிக்கப்பட்டன.

வாசுதேவன்

### இலங்கை மக்களும் போராட்டமும்

"இலங்கை மக்களும் போராட்டமும" என்ற விடயம் பற்றி ப.வி.ஸ்ரீரங்கன் உரையாற்றினார.

முதலாளித்துவ வளர்ச்சியே இனமுரண்பாடுகளை உருவாக்கியது. போராட்டங்களில் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் மக்கள்தான். ஏகாதிபத்திய நலன்கள் உலகப்பிரச்சனைகளுள் ஊடுருவியுள்ளன. ஈழவிடுதலைப்போராட்டம் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுதரப்போவதாக மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்பினார்கள். ஆனால் உடமை வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாப்பதுதான் அதன் நோக்கமாக இருந்தது.

இப்படியான பல கருத்துக்களை முன்வைத்த பேச்சாளர், இறுதியாக என்ன சொல்ல முயலுகிறார் என்பதை அறிவது கடினமாகவே இருந்தது!

## கவிதை விமர்சனம்

கடினமான விடயங்களை எளிமை நயத்தோடும், கற்பனைத் திறனோடும் விளக்க முற்படுபவை கவிதைகள். இன்று ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளில் அநேகமானவை கவிதைகளைத் தாங்கி வெளிவருகின்றன. சில பக்கங்களில் எழுதிச் சொல்லவேண்டிய விடயங்களை ஒரு சில வரிகளில் சொல்லிவிடும் தன்மை கவிதைகளுக்கு உண்டு. அப்படிப்பட்ட கவிதைகளைப் பற்றி விமர்சனம் செய்யும் திறமை குமரனுக்கு இருக்கிறது என்பதை நிருபனமாக்கியது "கவிதைகள் மீதான விமர்சனப்பார்வை" என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய உரை. மரபுக்கவிதைக்கும், புதுக்கவிதைக்கும் உள்ள துல்லிய இடைக்கோட்டை இனங்காட்டினார் குமரன்.

## சிறுவர் இலக்கியம்

ரோஜாப் பூக்களை விட மென்மையானவை குழந்தையின் உள்ளங்கள். இந்த உள்ளங்களின் உளவியலை ஆராய்ந்து இலக்கியங்களைப் படைப்பது கடினமான விடயமே. "சிறுவர் இலக்கியம்" என்ற நிகழ்ச்சியில் பல கருத்துகள் பறிமாறப்பட்டன.

## மனிதமும் தேடலும்

இந்த நிகழ்ச்சிக்குப் பின் இடம் பெற்ற "தேடல்களில் எழும் சில அடிப்படைப் பிரச்சனைகள்" என்ற தலைப்பில் மனிதம் சஞ்சிகைக் குழுவினர் கட்டுரை வாசித்தனர். சற்றே கனமான விடயம் என்ற காரணத்தால் இதுவிடயமாகக் கருத்துப்பறிமாறியவர்கள் கடினமான சொற்களைப் பாவித்தனர். இத்தகைய விடயங்களை விளக்குகையில் இலகுவான சொற்பதங்கள் பாவிக்கப்பட வேண்டுமென்று வாசகரொருவர் சுட்டிக் காட்டினார்.

தேடலில் ஈடுபடுகிறோம் எனக் கூறிக் கொண்ட 'மனிதம்' குழுவினர், தாம் பற்றிக் கொண்ட "சில கோட்பாடுகளை" விமர்சனமின்றிப் இறுகப்பற்றிக் கொண்டு "தேடலில்" ஈடுபட்டது. இடுப்பில் கல்லைக் கட்டிக் கொண்டு நீந்த முயற்சிப்பது போல இருந்தது.

அடுத்த சந்திப்பு

பத்தாவது இலக்கியச்சந்திப்பு பீலபேல்ட் நகரில் இடம் பெறுமென்று தீர்மானிக்கப்பட்டு அதற்கான செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## ராஜனி

"மக்களுக்காக இறப்பதென்பது மலையைவிடவும் பாரமானது"

ஆம்! பிற்போக்குவாதிகளின் ஈயக்குண்டுகள் இன்னுமொரு இதயத்தைத் துளைத்துச் சென்றன.....அடிமட்ட மக்களோடு மக்களாக வாழ்ந்த மனிதநேயமிக்க மருத்துவர், ராஜனி சமாதானத்தின் நிர்மாணம் நோக்கிய மைல்களைக் கடந்து செலல வேண்டுமென்ற வேகம் கொண்டவராகவிருந்தார். "நினைவுகளில் ராஜனி" என்ற நிகழ்சியில் ரஞ்சினி,மல்லிகா ஆகியோர் அவரை நினைவு கூர்ந்தனர்.

## சட்டமும் பெண்களும்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் முதலாவதாக இடம் பெற்ற "சட்டமும் பெண்களும் " என்ற நிகழ்ச்சியில் இது தொடர்பான கட்டுரை வாசிக்கப்பட்டுக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது

"சட்டங்களை மாற்றுவதால் பயனில்லை, சமூகமாற்றத்தின் போதே பெண்கள் விடுதலை பெறவேண்டும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கற்பு என்பது பொதுவானதாகவிருக்கையில், பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதை "கற்பழிப்பு" என்ற சொற்பதத்தின் மூலம் அழைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்"

போன்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

பத்திரிகைகளை நெறிப்படுத்த விமர்சனங்கள் இன்றியமையாதவை என்று நான் ஏலவே குறிப்பிட்டிருந்தேன். மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளை விமர்சனம் செய்ய முற்பட்டு அதை ஜனரஞ்சகமாக நடராஜன் நடத்தினார். சிந்தனை, தேனீ, வெகுஜனம் ஆகிய, பத்திரிகைகளின் ஆசிரிய கருத்துக்களிலிருந்து பகுதிகளை எடுத்து தனித்தனியாக விமர்சித்தார். இப்பத்திரிகைகளின் அடிப்படைகளை தான் ஏற்றுக் கொள்ளாத படியால் அவைகளில் வெளியாகும் மற்றவைகளும் போலியானவை எனத்தான் கருதுவதால் அவைகளை விமர்சிக்கவில்லை எனக்குறிப்பிட்டார். குறிப்பாக சிந்தனைப் பத்திரிகை பத்மநாபாவின் கொலையைக் கண்டித்தமை, "கிட்லரின்" கொலையைக் கண்டித்ததிற்கு ஒப்பாகுமெனக் குறிப்பிட்டார்.

புதுமை, தூண்டில் ஆகிய பத்திரிகைகளின் சகல அம்சங்களையும் (புதுமையின் ஒழுங்கைத் தவிர) வரவேற்ற விமர்சகர், அக்னி, ஏதோ "ஒன்றை" கொள்வனவு செயகின்றது எனக் குறிப்பிட்டமை வேண்டுகமன்று செயத விமர்சனமாக அமைந்திருந்தது. தான் புலிஇயக்ககத்தின் சில நடைமுறைகளை இன்றும் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்ட விமாசகர் ஏலையா, பிரவாகம் போன்ற பத்திரிகைகளையும் கேலி செய்யும் முறையில் விமர்சித்தார்.

விமாசனங்களுக்கு பதில்லளித்த ஆசிரியர்கள் நடராஜனின் விமர்சனத்தை ஒரு வாசகனின் விமர்சனமு் என்ற முறையில் தாம் வரவேற்பதாகக் கூறினார்கள். இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்ட மனிதம் ஆசிரியர், சஞ்சிகை ஆசிரியர்களின் பக்குவப்பட்ட தன்மையைப் பாராட்டினார்.

நடராஜனின், சஞ்சிகைகள் மீதான விமர்சனம் முழுமையாக அமையவில்லை. ஒரு விமர்சகர் சஞ்சிகைகளின் சகல அம்சங்களும் பொது நிலையிலிருந்து விமர்சிக்கப்பட வேண்டுமெனத் தளிர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த குமரன் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய சிவபாலன் என்ற வாசகர், நடராஜன் சில பத்திரிகைகள் மீது முழுமையான விமர்சனங்களை வைக்கவில்லையெனவும், உதாரணமாக தூண்டில் பத்திரிகை சகல இயக்கங்களையும் சாடும் வேளையில் தமது கருத்து எது என்பதை தெளிவாகக் கூறுவதில்லை எனத் தெரிவித்தார்.

ஆசிரியர்களும் வாசகர்களும் ஆலன் வசகர்வட்டத்தினருக்கும், இலக்கியச்சந்திப்புக் குழுவினருக்கும் 9 இலக்கியச்சந்திப்பை திறம்பட நடத்தியதிற்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவித்தனர்.

---


# தேனீ

*இரு மாதங்களுக்கொருமுறை வெளிவருகின்றது.*

*ஆசிரியர்குழு தேனீக்கள்*

*தனிஇதழ் 3டீ.எம்*

*வருடசந்தா 20டீ.எம்*

*ஆக்கங்கள், சந்தா முதலிய அனைத்துத் தொடர்புகளுக்கும்.*

*THENEE*

*Im Wacholder 11,*

*7151, ALLMERSBACH im TAL.*

*Buch:THENEE*

*Sparkonto Nr: 49435418*

*Bankleitzahl: 60261818*

*RAIFFEISEN BANK WEISSACHER TAL EG*

*7151, ALLMERSBACH im TAL*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லைகள் இறுக்கப்படுகின்றனவாம்



1992ல் ஐரோப்பா முழுவதும் போக்குவரத்தில் இருக்கும் தடைகளை அகற்ற "ஷெங்கன் ஒப்பந்தம்" வழிசெய்கின்றது என பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன. ஆனால் உண்மையில் இந்த ஒப்பந்தத்தினால், மேற்கு நாடுகளினால் அதிகமாக சுரண்டப்பட்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு வருபவர்களின் உரிமைகள் வெகுவாக பாதிக்கப்படவுள்ளன. அத்துடன் ஐரோப்பா முழுவதற்குமான ஒரு மத்திய அரசியல் - கட்டுப்பாட்டு அமைப்பும் உருவாக்கப்படவிருக்கின்றது.

1993ல் ஐரோப்பா முழுவதற்கும் பொதுவான சந்தையை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக "ஷெங்கன் ஒப்பந்தம்" 1985 ஜூன் 14ம் திகதி ஷெங்கன் (லுக்சம்பேர்க்) நகரில் உருவாக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலுள்ள எல்லைகளில் உள்ள போக்கு வரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வெளிஎல்லைகளிலுள்ள கட்டுப்பாடுகள் 'ஐரோப்பா அல்லாத நாடுகளிலிருந்து முறையற்ற வகையில் வருபவர்களை தடுக்கு முகமாக' கடுமையாக்ககப்பட்டுள்ளன.

1989 டிசம்பரில் ஒப்பந்த நாடுகள் (பெல்ஜியம், நெதர்லண்டஸ், லக்ஸம்பேர்க், மேற்கு ஜேர்மனி; பிரான்ஸ்) இந்த ஒப்பந்தத்தில் கைசாத்திடுதல், மேற்கு ஜேர்மனியின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்பட்டது. கிழக்கு ஜேர்மனியும் இந்த ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதே மேற்கு ஜேர்மனியின் கோரிக்கையாகும். லக்ஸம்பேர்க், நெதர்லண்டஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கும் ஒப்பந்தம் பற்றிய கருத்து வேற்றுமைகள் இருந்ததாகக் கூறப்பட்டது.

நெதர்லண்டஸ், பெல்ஜியம் பிரதிநிதிகள்' சகல பிரஜைகள் பற்றிய கோப்புக்கள் (பைல்ஸ்) கொண்ட ஒரு மத்தியை உருவாக்குதல் தனி மனித சுதந்திரங்களைப் பாதிக்குமெனவும், வெளிஎல்லைக்கட்டுப்பாடுகள் அரசியல் தஞ்சம் கோரும் உரிமைகளைப் பாதிக்குமெனவும் கண்டித்தனர். 1990 ஏப்பிரலில் பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இணைக்கப்பட்ட ஜேர்மனியை உள்ளடக்கிய ஒப்பந்தம் 1992ல் அமுலாகும் சாத்தியம் இப்போது உள்ளது.

« முகிலன் »

இந்த ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகள் யாவும் இரகசிய ராஜதந்திரப் பேச்சு வார்த்தைகள் என்ற அடிப்படையிலேயே நடைபெற்றன. இப்பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் இந்த நாடுகளின் பாராளுமன்றங்களுக்கு

அறிவிக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான பிரதிநிதியுடனோ அல்லது மற்றைய நாடுகளுடனோ எந்த விதமான ஆலோசனைகளும் நடத்தப்படவில்லை.

இந்த ஒப்பந்தம் ஷெங்கன் குழு நாடுகளின் அரசாங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், அந்த நாடுகளில் ஏற்கனவே உள்ள அரசியல் தஞ்சம் கோரும் உரிமைக்கான சட்டங்கள் யாவையையும் பாரதூரமாகப் பாதிக்கும். ஸ்பெயின், இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகள் ஷெங்கன் குழுவில் இணைய விரும்பின. ஆனால் அவர்களின் பிரதிநிதிகள் குடிவரவுக் கொள்கைகளில் தாராள மனபான்மை கொண்டிருந்ததினால்' அவர்களுக்கு அங்கத்துவம் மறுக்கப்பட்டது.

வெளிநாட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதற்கு வழமையாக கூறப்படும் காரணங்களைவிட, புதிய காரணங்களை இந்தக் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். முதலாவதாக ஐரோப்பியரல்லாதவர்களுக்கு 'விசா' கட்டாயமாக்கப்பட்டது. நூற்றிநாலு நாடுகளைச் சேர்நதவர்கள் இதனால் பாதிக்கப்பட்டனர். அதிகமாக அரசியல் தஞ்சம் கோருவோர் வரும் நாடுகளிலிருந்து உள்நுளைபவர்களுக்கு மேற்கு ஜேர்மனியும் 'பெநெலக்ஸ்'நாடுகளும் [1] 'விசா'முறைகளை கடுமையாக்கியுள்ளன. 1986ல் பிரான்ஸ், பயங்கரவாதத்தை தடைசெய்வதற்காக எனக் காரணம் கூறி 'விசா' கெடுபிடிகளைக் கடுமையாக்கியது. ஷெங்கன் குழு நாடுகளிலிருக்கும் வெளிநாட்டவர்கள் அந்த நாடுகளுக்குள் பிரயாணம் செய்வதற்கு விசா அவசியமில்லை. ஆனால் உள் நுளையும் நாட்டிற்குள் சென்ற மூன்று நாட்களுக்குள் அந்த நாட்டில் அவர்கள் தங்களைப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

இந்த முறையினால் எந்தவொரு "தேடப்படும்" மனிதனையும் இந்தப் பொதுவான நாடுகளில் தொடருவதற்கு பொலிசாருக்கு உதவுமெனக் கூறப்படுகின்றது. ஒரு மத்திய "கம்புயூட்டர்" தரவுலங்கி உருவாக்குவதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. இந்த மத்திய தரவுவங்கியில்; நாடுகடத்தப்பட வேண்டியவர்கள், காணாமற் போனவர்கள், பாதுகாப்பு கோருபவர்கள், கோடுகளில் சாட்சி சொல்ல வேண்டியவர்கள், நாடுகளுக்குள் அனுமதிக்க படக்கூடாத வெளி நாட்டடவர்கள், ஆகியோர் பற்றிய தகவல்கள் சேர்த்து வைக்கப்படும். ஒப்பந்தத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் இதே போனற தரவுகள் "கம்புயூட்டரில்" பதிவுசெய்து வைக்கப்படும்.-ஒவ்வொரு அங்கத்துவ நாட்டிலும் இதே போன்று தரவு வங்கிகள் (databank) உருவாக்கப்படும்.

இரண்டு இரகசிய விதிகளின் படி குடிபோற்றம், பாதுகாப்பு சம்பந்தமாக மிக்க கவனத்துடன் (watch) இருக்க வேண்டியவர்களைக் கொண்ட நாடுகளின் அட்டவணையும் தயார் செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு ஒப்பந்த நாட்டின் "பொதுசன அமைதி, தேசிய பாதுகாப்பு, சர்வதேச தொடர்பு" ஆகியவற்றிற்கு பங்கம் விளைவிக்கக் கூடியவருக்கு ஐரோப்பிய சமூகக் 'கோட்டை'க்குள் அனுமதி மறுக்கப்படலாம். இதன்படி ஜேர்மனியில் "வதிவிட அனுமதி" பெற்ற ஒரு வெளிநாட்டவர் வேறு ஒரு அங்கத்தவ நாட்டில் வேண்டப்படாதவராக இருந்தால், அவருடைய வதிவிட அனுமதிக்கும் ஆபத்து ஏற்படலாம்! இந்த திட்டத்தின் படி வதிவிட அனுமதி மறுக்கப்பட்ட வெளிநாட்டவர் முழு ஐரோப்பிய (ஒப்பந்த) நாடுகளை விட்டு வெளியேறும் வரை பொலிசாரினால் தேடப்பட்டவராகக் கருதப்படுவார்.

"உரிமைகளுக்கும் உயிர்களுக்கும் ஆபத்து இருப்பதால்" அரசியல் தஞ்சம் கோரி வருபவர்களை நாட்டின் எல்லைகளில் திருப்பி அனுப்புவதை

---

[1] பெல்ஜியம், நெதர்லண்ட், லக்ஸம்பேர்க் ஆகிய நாடுகள்

www.tamilarangam.net

தடுக்கும் "ரோம் உடன்படிக்கை"யை ஷெங்கன் ஒப்பந்தம் மீறுகின்றது. அவர்களுடைய தஞ்ச விண்ணப்பங்கள் ஆராயப்படாமலே அவர்கள் திருப்பியனுப்பப்படலாம். அனுமதி பத்திரங்கள் இல்லாத பிரயாணிகளை கொண்டுவரும் விமானங்கள் (ஸ்தாபனங்கள்) பொறுப்பாளிகளாகக் கணிக்கப்படுவதுடன், பிரயாணிகளும் தண்டிக்கப்படுவார்கள்.

இந்த விளைவுகளைத் தடுப்பதற்காக போக்குவரத்து ஸ்தாபனங்கள்; பதுகாப்பின்மையால் தமது நாட்டை விட்டு வெளியேறும் அகதிகளை ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவிக்கலாம். ஷெங்கன் ஒப்பந்தத்தம் குறிப்பிடும் இந்த நடவடிக்கைகளை ஏற்கனவே சில ஐரோப்பிய நாடுகள் நடைமுறைப்படுத்துகின்றன. முறையான அனுமதிப்பத்திரங்களில்லாத பிரயாணிகளை ஏற்றி வந்ததனால் "லுப்ற்ஹன்சா" நிறுவனத்தின் மீது சமீபத்தில் பிரங்ப்பார்ட் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மறுபுறத்தில் "அனுமதிச்சீட்டு" கொடுக்கும் நாடுதான் அரசியல்தஞ்ச விண்ணப்பங்களுக்குப் பொறுப்பாகும். சட்டரீதியற்ற முறையில் ஒருவர் எல்லைகளை கடந்தால், முதலாவது கடக்கப்பட்ட எல்லையையுடைய நாடு அவருடைய தஞ்சவிண்ணப்பத்தை பொறுப்பேற்க வேண்டும். ஒப்பந்தத்தில் கைசாத்திட்ட ஒரு நாட்டில் ஒருவருக்கு தஞ்ச விண்ணப்பம் மறுக்கப்பட்டால், அயல் நாடொன்றில் அரசியல் தஞ்சம் "கோரலாம்", ஆனால் அந்த நாடு, முன்னைய நாடு தஞ்ச விண்ணப்பத்தை மறுத்ததைக் காரணம் காட்டி, அவருடைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

இன்று ஐரோப்பிய நாடுகளில், அரசியல் தஞ்ச விண்ணப்பம் கோருவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நாடுகளுக்கு இந்த "விதி" ஒரு நல்ல சாட்டாகவே அமையும். இதுவரை காலமும் ஒவ்வொரு நாடும் தனித்தனியாக கடைப்பிடித்து வந்த "அரசியல் தஞ்ச விண்ணப்ப உரிமை எதிர்ப்பு" கொள்கையானது, ஷெங்கன் ஒப்பந்த மூலமாக ஐரோப்பிய முதலாளித்துவத்தின் பாரிய ஆயுதமாக மாற்றப்பட்டுள்ளது. இது இந்த நாடுகள் வெளிநாட்டவர்களுக்கு எதிராக எடுக்கும் மற்றைய படவடிக்கைகளுடன் ஒத்துப் போகக் கூடியதாகவே இருக்கின்றது.




கள்ளக்குடியேற்றக்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள், பயங்கரவாதிகள், போதைமருந்து கடத்தல்காரர்கள் ஆகியோருக்குச் சமமாகவே, அரசியல் தஞ்சம் கோருவோர் இந்த அரசாங்கங்களினால் கருதப்படுகின்றனர். மறுபுறத்தில் இவை, மனித உரிமைகளை மீறுவதுடன் மக்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறும் சூழ்நிலமைகளையும் ஏற்படுத்தும் ஜனநாயக விரோத அரசாங்கங்களை ஆதரிக்கின்றன.

டென்மார்க், சுவீடன், நெதர்லண்ட் ஆகிய நாடுகளில் அகதிகளைத் தரம் பிரிப்பதன் மூலம் அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனங். A தரத்தில் உள்ள அகதி ஜெனிவா ஒப்பந்தத்தின் படி ஏற்றுக் கொள்ளப்படுபவர், B தரத்திலுள்ளவர் வதிவிட மற்றும் வேலைசெய்யுமுரிமையையும் உடையவர்; அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'மனிதஉரிமை அடிப்படையில்' அவருடைய நாட்டில் அரசியல் நிலமை சீரடையும் வரை வதிவிட உரிமை பெறுபவர்கள். ஆனால் இந்த B தரமோ அல்லது 'மனிதாபிமான' வதிவிட சலுகையோ உண்மையான பாதுகாப்பை அளிப்பதில்லை.

1990 ஜனவரி மாதத்தில் சுவீடன் அரசாங்கம் பல்கேரியாவிலிருந்து வந்த 5,200 துருக்கி இனத்தவர்களை நாடுகடத்தத் தீர்மானித்தது.

நெதர்லண்டில் 1987ல் 8556 தஞ்ச விண்ணப்பதாரர்களில் 237 ( 2.8 %) பேர்களுக்கு A தரஅந்தஸ்தும், 444 பேருக்கு (5.8%) B தர அந்தஸ்தும 450 பேருக்கு (5.4%) "மனிதாபிமான" வதிவிட உரிமையும் கொடுக்கப்பட்டன. 86.7% மானோருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

சுவிடனில் 1988ல் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் 67.5% வீதமான வாக்காளர்கள் அகதிகளை நகரப்பதிக்குள் ஏற்றுக் கொள்வதற்கெதிராக வாக்களித்தனர்.

பிரான்சில் அகதிகள் சம்பந்தமான வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு 142 மில்லியன் பிராங்குகள் ஒதுக்கப்பட்டன. அத்துடன் தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு 100 மில்லியன் பிராங்குகள் ஒதுக்கப்பட்டன!

மேற்கு ஜேர்மனியில் நடைமுறையில் வந்திருக்கும் சட்டங்கள் பற்றி வாசகர்கள் ஏற்கனவே அறிந்த விடயமாகும்.

மூன்றாவது உலக நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு அகதிகள் வந்து குவிவதாக கூறப்படுகின்றது. ஆனால் 1988ல் உலகின் மொத்த அகதிகளில் 5.8% மட்டும்தான் ஐரோப்பாவிற்குள் வந்துள்ளார்கள். மறுபுறத்தில் வறுமையான நாடுகள் நாளொன்றிற்கு 3000 அகதிகளை உள்வாங்குகின்றன. 1988 ஐரோப்பா 737,000 அகதிகளை அங்கிகரித்தது. ஆனால் உலக அகதிகளின் தொகையை 18 அல்லது 20 மில்லியனாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதுவர் கணிப்பிடுகின்றார்.

சோமாலியா, சூடான், பாக்கிஸ்தான் ஆகிய நாடுகள் 4,137,000 அகதிகளை எதோப்பியா, உகண்டா, சயர், சாட், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஏற்றுள்ளன. தென் கிழக்கு ஆசியா 160,00 அகதிகளையும், மத்திய அமெரிக்கா 346,000 அகதிகளையும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் 3000 தமிழ்களின் வருகையை நெதர்லண்டில் "ஆக்கிரமிப்பு" என வர்ணிக்கின்றனர். ஷெங்கன் ஒப்பந்த நாடுகளில் அகதிகள் ஒரு சிறு தொகையினராகவே இருக்கின்றனர் பிரான்சில் 0.31%, பெல்ஜியத்தில் 0.37%, மேற்கு ஜேர்மனியில் 0,21% ஆகவே உள்ளது.

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சொந்த நாட்டுக்குப் போமுடியாத நிலையிலுள்ள அகதிகள் ஒரு திரிசங்கு சொர்க் நிலமையிலேயே வாழ்கின்றார்கள். அபிவிரித்தி அடைந்த நாடுகளின் நவீன அடிமைகள் அவர்கள். குறைந்த கூலியில அவர்களின் உழைப்புகள் உறிஞ்சப்படுகின்றன. தொழிற்சங்கப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைப்திில்லை. அவர்களுடைய உழைப்பு தேவையற்ற பொழுது அவர்கள் வெளியேற்றப் படுவார்கள்.

1987ல் மேற்கு ஜேர்மனியில் 87,539 விண்ணப்பங்களில் 9.4% மானவையே ஏற்றுக் கொள்ளப்பட்டன. 70% மானவை முற்றாக நிராகரிக்கப்பட்டன. பிரான்ஸில் 1983ல் 30% மான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன, 1989ல் 72%மானவை நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பதாரர் எந்த நாட்டிலிருந்து, பூமியின் எந்தப் பகுதியிலிருந்து வருகிறார்கள், வருகிறார் என்பதை பொறுத்தே அகதி அந்தஸ்து வழங்கப்படுகின்றது பிரான்ஸில் 1988ல் 89.5%மான தென் கிழக்காசியாவைச் (உ+ம். வியட்னாம்) சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் அங்கிகரிக்கப்பட்டன ஆனால் 10.5% மான ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே அங்கிகரிக்கப்பட்டன.

(31ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் பெண்கள் அமைப்புகள்.

உலக சனத்தொகையில் சரிசமனாக இருக்கும் பெண்கள் தமது உரிமைகளை இன்னமும் முழுமையாக வென்றெடுக்கவில்லை.

பெண்கள் ஒடுக்கப்படுவதை சுட்டிக்காட்டி அம்பலப்படுத்தவும், பெண்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதிலும் உலகெங்கிலும் உள்ள பெண்கள் அமைப்புகள் பெரும்பங்கை அளித்துவருகின்றன. தமது முயற்சியில் இவைகள் குறிப்பிடத்தக்களவு முன்னேறியுமுள்ளன. பெண்களின் விடுதலையை நோக்கிய சிறிதளவு முன்னேற்றங்களின்கூட பின்னணியில் கூட இவ்வமைப்புகளின் உழைப்பே காரணமாக இருந்து வந்திருக்கின்றது. எந்த உரிமையையும் போலவே பெண்ணுரிமையும் போராடாமல் பெறமுடியாத ஒன்றே ஆகும்.

## பெண்ணின் குரல்

பெண்ணின் குரல் 1978 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் குமாரி அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

"பெண்ணின்குரல்" என்ற சஞ்சிகையை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இவ்வமைப்பானது வெளியிட்டு வருகிறது. அத்துடன் பெண்விடுதலை சம்பந்தமான துண்டுப்பிரசுரங்கள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றையும வெளியீட்டு வருகிறது. இவைகள் ... பெண்கள் எதிர்நோக்கும் பாலியல பலாத்காரம், குடும்பத்தில் எதிர்நோக்கும் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை போன்ற பிரச்சனைகளுக்குத்தான தீர்வுகாண்பதற்கான முயற்சிகளையும் எடுத்துவருகின்றது.

பெண்கள் மீதான சமூக ஒடுக்குமுறைகளையும், தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் நடாத்தப்படும் பெண்ஒடுக்குமுறைகளையும், அழகுராணிப போட்டியிலிருந்து பெண்கள் விளம்பரப் பொருட்களாகப் பாவிப்பது வரை

## மல்லிகா

நடைமுறையில் இருக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கெதிராகக் குரல் கொடுத்தும், போராடியும் வருகிறது.

தோட்டத் தொழிலாளப் பெண்கள் உட்பட அனைத்து தொழிலாளப் பெண்களுக்கான உரிமைகளுக்காக போராடி வருவதோடு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றின் அவசியத்தையும் வலியுறுத்தி வருகிறது.

தோட்டத் தொழிலாளப் பெண்களுக்கு சமசம்பளம் வழங்குமாறு நடாத்தப்பட்ட போராட்டங்களில் முக்கிய பங்காற்றி அதில் வெற்றியடைந்துள்ளதோடு, அவர்களது சுகாதார கவனிப்புகளிற்காகவும் குரல்கொடுத்து வந்துள்ளது என்பன இவ்வமைப்பின குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.



பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கான சட்டரீதியானஆலோசனைகளை இலவசமாக வழங்குவதற்கான நிலையமொன்றை பாத்திபா வீதி இல 9/4, கொழும்பு 5 என்னும் முகவரியில் ஒரு பெண்சட்டத்தரணியைக் கொண்டு நடாத்தப்படுகிறது.

## சமாதானத்திற்கான பெண்கள்.

"பெண்ணின்குரலை"த் தொடர்ந்து மேலும் பல பெண்கள் அமைப்புகள் தோற்றம் பெற்றன. இவற்றில் குறிப்பிடத்தக்க இன்னுமொரு அமைப்பு `சமாதானத்திற்கான பெண்கள்' என்ற அமைப்பாகும்.

'சமகாளி' என்ற சஞ்சிகையை இவ்வமைப்பு வெளியிட்டு வருகிறது. இது ஒரு பரந்த வெகுஜன அமைப்பாகும். இலங்கையில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் மீள உருவாக்குவதற்கான முயற்சிகளில் பங்களித்து வருகிறது. இது இன்றைய அவசிய தேவையாகும்.

சகல தரப்புகளினாலும் கட்டவிழ்த்து விடப்படும் அராஜகங்களால் பாதிப்புற்றவர்களுக்கு நிவாரணமளிப்பதை முக்கிய நோக்காக இவ்வமைப்பு கொண்டுள்ளது.

இலங்கையின் தமிழ்ப் பெண்களுடன் கரங்களைக் கோர்த்து இனப்பிரச்சனைக்கான தீர்வினை வலியுறுத்தியும் வருகிறது.

இவற்றில் தமிழ்ப் பெண்கள் அமைப்பு, அன்னையர் முன்னணி ஆகிய அமைப்புகள் குறிப்பிடத்தக்கவை.

பெண்கள் தாமாக முன்வந்து தங்களுடைய பிள்ளைகள் கொல்லப்படுவதைக் கண்டித்தும் காணமல் போகும் தமது மைந்தர்களை திருப்பித்தருமாறும் கோரி போராட்டம் நடாத்துகிறாரகள். ஆயிரக்கணக்கான பெண்கள் வீதியில் இறங்கி ஊர்வலங்களை நடத்தியிருக்கின்றனர். யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக அன்னையர் முன்னனி நடாத்திய மறியல்போராட்டம் இங்கு முக்கியமானதாகும்.

கல்வியறிவுள்ள பெண்கள் அரச உத்தியோகத்தர், கவிஞைகளை, கலைஞரகள, தொழிற்சங்க உறுப்பினர்கள், விரிவுரையாளர, ஆசிரியர்கள் என சகல மட்டங்களிலும் உள்ள பெண்களையும் இவ்வெகுஜன அமைப்பானது உள்ளடக்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துச்சேவைகள் தடைப்பட்டிருந்த காலங்களில், மோட்டார் சைக்கிள்களில் சென்று தமது துண்டுப்பிரசுரங்களை இவ்வமைப்பைச் சேர்ந்த பெண்கள் விநியோகித்தனர்.

'பெண்களுக்கு பத்து கட்டளைகள்' என்று தலைப்பிட்டு, பெண்கள் கட்டைப் பாவாடை அணியக்கூடாது, தலைமயிர் வெட்டக்கூடாது. சைக்கிள் ஓடக்கூடாது, தமது கணவர் தவிர்ந்த வேறு ஆண்களுடன் வீதிகளில் திரியக்கூடாது போன்ற அடக்குமுறைச் சட்டங்களடங்கிய பெயர் விலாசமில்லாத துண்டுப்பிரசுரமொன்றை சில விஷமிகள் வெளியிட்டுள்ளதைக் கண்டிக்கும் முகமாகவே மேற்படி துண்டுப்பிரசுரங்கள் இவ்வமைப்பினால் வெளியிடப்பட்டன.

விஷமிகளின் துண்டுப்பிரசுரம் பல பெண்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டது.

"பெண்கள் அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்" என்று வடபகுதியில் 'விடுதலை'இயக்கமொன்றினால் வெளியிடப்பட்டிருந்த இன்னுமொரு துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்ததை வடக்கிலும், தெற்கிலும் உள்ள பெண்கள் பரவலாகக் கண்டித்தனர்.

## பெண்கள் ஆய்வு வட்டம்-

இந்த அமைப்பும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலமும்; ஏனைய கலைவடிவங்களின் மூலமும் பெண் ஒடுக்குமுறை, பெண்விடுதலை ஆகியவற்றைப் பிரச்சாரப்படுத்தி வருவதோடு கலந்துரையாடல்களையும், ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

சமூகமாற்றத்தின் அவசியத்தையும், போலிச் சம்பிரதாயங்கள் நிறுத்தப்படவேண்டுமென்றும் வலியுறுத்தி வரும் இவ்வமைப்பு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணங்கள் பெண்களுக்கு மாத்திரம் உரியனவல்லவென்பதை தமது கலை. இலக்கிய முயற்சிகளின் மூலம் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

விடுதலைப்போராட்டத்தில் ஒரு மரணிக்கையில் அவனை வீரனாக மதிக்கும் இச்சமூகமும், குடும்பமும் அதுவே ஒரு பெண்ணாக இருந்து அவள் அரச படைகளினால் பலாத்காரப்படுத்தப்பட்டால் அவளை அவமானப்படுத்தி ஒதுக்கி வைக்கின்றார்கள்

வடபகுதியில் இன்னமும் நடைமுறையில் இருக்கும் 'தேசவழமைச் சட்டமானது'பெண்களுக்கு எதிராகவே இருக்கின்றது பெண்கள் ஆய்வு வட்டம் உட்பட அனைத்து அமைப்புகளும் இதனை எதிர்த்து வருகின்றன

இத்தகைய முன்னெடுப்புகள் பெண்கள் ஆய்வு வட்டத்தினரின் பெண்விடுதலை தொடர்பான தொலை நோக்கிறகான உதாரணங்களாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முற்போக்குப் பெண்கள் முன்னணி.

இவ்வமைப்பானது 1981 ஆம் ஆண்டு, இப்பாகமவில் (குருநாகல் மாவட்டத்திலிருக்கும் ஒரு கிராமம்) ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முக்கிய செயற்பாடாக அமைந்தது, நீர்ப்பாசன வரிக்கெதிராக நடத்திய போராட்டமாகும். இப்போராட்டத்தின் போது ஏராளமான விவசாயப் பெண்கள் வீடுவீடாகச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

'பெண்களின் வழி' இவ்வமைப்பின் சஞ்சிகையாகும்.

[illegible] தினத்தின் போது இவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில், தற்போது நடைபெறும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரியும், விலைவாசியுயர்வையும் கண்டித்தும் இருந்தது.

## பெண்கள் நிலையம்.

ஜாஎல எனுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு தொழிற்சாலைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளைப் பகிரங்கப்படுத்தியும், எதிராகக் குரல் கொடுத்தும் வருகிறது.

## சிங்கள - தமிழ் கிராமிய பெண்கள் சங்கம்.

1987ம் ஆண்டு நுவரெலியாவில் தோற்றம் பெற்று, முக்கியமாக இனவாதத்திற்கெதிரான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இதிலுள்ள பல உறுப்பினர்கள், இலங்கையில் தேசிய இனப்பிரச்சனையால் பாதிப்புக்குள்ளான பெண்களாவர். ஏறக்குறைய 2000 மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது இவ்வமைப்பு.

## பெண்கள், கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.

1985 யூன் மாதம் 9 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது, பெண்கள் ஒடுக்கப்படுவதை கூடுதலான அளவு பெண்கள் மத்தியில் தெரியப்படுத்தி, சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பெண்விடுதலை சம்பந்தமான கருத்துகளைப் பரப்புதல் போன்றவற்றை செய்து வரும் இதன் முக்கிய நடவடிக்கையாக 'வியர்வைத்துளி' என்கின்ற [illegible] வேலை செய்யும் பெண்களுக்காக வெளியிட்டுவருகிறது.

மிகக்குறைந்த சம்பளத்துடன் பலமாகச் சுரண்டப்பட்டுவரும் சுதந்திர வர்த்தக பெண்தொழிலாளர்களுக்காக இலங்கையில் வெளியிடப்படும் ஒரே சஞ்சிகை என்பது குறிப்பிடத்தக்கது.

1988 ஆம் ஆண்டு சுதந்திரவர்த்தக வலயத்தில் வேலை செய்யும் பெண்தொழிலாளியொருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இதற்குக் காரணம் இந்தச் சஞ்சிகைக்கு அப்பெண் எழுதிய ஒரு கவிதையாகும். காலையில் வேலைக்குப் புறப்பட்டு வருவதிலிருந்து வேலைக்கு வந்து வேலைத்தளம் வரை ஒரு பெண் என்ற வகையில் தான் அனுபவிக்கும் துயரங்களையே இந்தப் பெண் தன் கவிதையில் எழுதியிருந்தாள். இவரைத் திரும்பவும் வேலையில் சேருமாறு, இச்சஞ்சிகை உட்பட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல சஞ்சிகைகள் குரல்கொடுத்து, பலமாத காலமாகத் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட

போராட்டத்தின் விளைவாக இப்பெண் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டார்.

## தாய்மண்ணின் தாயும், மகளும்.

89 இன் நடுப்பகுதியில் தென்னிலங்கையிலுள்ள அனைத்து பெணகள் அமைப்புகளின் கூட்டு முன்னணி இதுவாகும்.

நாடுபூராகவும் தொடரும் மனிதப்படுகொலைகளைக் கண்டித்தும், மனிதவுரிமை மீறல்களைக் கண்டித்து மனிதவுரிமைகளை மீளநிலைநிறுத்துவதற்காகவும் பாடுபட்டு வருகின்றது

# பெண்கள் சந்திப்பு

பெண்கள் சந்திப்பின் மூன்றாவது தொடர் 01.09.1990 அன்று வூப்பெற்றால் நகரில் நடைபெற்றது.

வரவேற்புரையைத் தொடர்ந்து அச்சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தங்களை சுயஅறிமுகம் செய்துகொண்டார்கள்.

முதல் நிகழ்ச்சியாக " பெண்கள் எவ்வாறு அடக்கப்படுகிறார்கள்" என்றதலைப்பின் கீழ் பல பெண்கள் தங்கள் கருத்துகளையும், அனுபவங்களையும் தெரிவித்தனர்.

"பெண் என்ற ரீதியில் சமூகத்தில் பல்வேறு வகையில் ஒடுக்கப்படுவதோடு, அரசாங்கத்தினாலும் ஒடுக்கப்படுகிறார்கள்.", " தொழில் செய்யும் இடங்களிலும் சம்பளம் , ஓய்வு போன்றவற்றில் பாரபட்சம் காட்டப்படுகின்றது." போன்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அடுத்து எதிர்கால ஆலோசனைகள் என்ற நிகழ்ச்சியில் இலங்கையில் இயங்கும் பெண்கள் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளவேண்டும், ஒவ்வொரு சந்திப்பின்போதும் மலர் வெளியிட வேண்டும், இலங்கையிலுள்ள அகதிகளுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவி செய்யவேண்டும், போன்ற ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

மதியபோசனத்தையடுத்து 'பெண்நிலைவாதம் என்றால் என்ன?' என்ற தலைப்பின் கீழ் ஓர்கட்டுரை வாசிக்கப்பட்டது.

அக்கட்டுரையில் பெண் நிலைவாதம் என்றால் என்ன?, பெண்நிலைவாதம் என்பது சரியானதா? பெண்நிலைவாதம் என்ற சொற்பதம் உபயோகிப்பது சரியானதா? பெண்நிலைவாதக் கருத்துகளுடன் மற்றவர்களை அணுகும்முறையில் பலவித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும், போன்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அதைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. அடுத்த சந்திப்பு ஸ்ருட்காட் நடைபெறுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய சந்திப்பு நன்றியுரையுடன் முடிவடைந்தது.

www.tamilarangam.net

# குழந்தையும்  உடல்நிலையும்

தாய்நாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழலில் குழந்தைகளை வளர்க்கவேண்டிய பெற்றோர்கள், பலவிதமான பிரச்சனைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளார்கள். அந்தரீதியில் குழந்தைகளுக்கு சிறுவயதில் தேவையான உணவுவகைகள், தடுப்பூசிகள், மற்றும் வேறு பராமறிப்பு முறைகள் அறிந்திருக்கவேண்டிய அவசியமாகிறது.

முதன்முறையாக குழந்தைக்கு கொடுக்கப்படவேண்டியதடுப்பூசிகள் மூன்று இடைவெளிகளில் 4 இலிருந்து 8 மாதம் வரை கொடுக்கப்படவேண்டும்.

மேலும் கொடுக்கப்படவேண்டிய தடுப்பூசிகளின் விபரம் கிழ்காணும் அட்டவனையில் காணப்படுகின்றன.

## குழந்தையும் சருமமும்.

ஒரு குழந்தையின சருமம் வறட்சியானதாகவிருந்தால் குளித்தபின்பு கிறீம் அளவாகப் பாவித்தல்வேண்டும். 'பம்பர்ஸ்' மாற்றும்போது கிறீம் பூசக்கூடாது. மலவாசல் சிவந்திருந்தால் அலலது பருக்கள் உண்டாகியிருந்தால், அவ்விடத்தை துப்பரவாகவும், நீர்ப்பற்றதாகவும் வைத்திருப்பதோடு, 'பம்பர்ஸ்' மாற்றும் போது கிறீம் பூசவேண்டும்.

பருக்கள் அல்லது புண் ஏற்பட்டிருந்தால் 'பிளாஸ்டிக்-பம்பர்ஸ்' பாவித்தலைத் தவிர்த்துக்கொண்டு, துணியால் தயாரிக்கப்பட்டவையை உபயோகித்தல் நல்லது. விசேடமான கிறீம்களோ, அல்லது வாசனப் பொருட்களோ பாவித்தல் கூடாது.

பொதுவாக குழந்தைகளுக்கு துணியால் தயாரிக்கப்பட்ட 'பம்பர்ஸ்' உபயோகித்து வந்தால் அவர்களின் சருமத்திற்கு அவை எந்தவிதமான தீங்கையுமளிக்காது. காற்றோட்டமானதாக இருத்தல் வேண்டும் உ+ம்: பருத்தி.

குழந்தைகளுக்கு மலவாசலில் சிவப்பாக அல்லது பருக்கள் வந்தால் 'பிளாஸ்டிக்-பம்பர்ஸ்' பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும், ஏனென்றால் அவை காற்றோட்டமற்றதால் வியர்வையால் ஏற்படும் ஈரப்பற்று வெளியேற முடியாதுபோகும் போது ஒட்டும் தன்மையை அடைகின்றன.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும்போது தாய்கூடுதலான விற்றமின் C, பழங்கள், புளிப்புத் தன்மையான பானங்கழ் உட்கொண்டால் மலவாசல் பகுதியில் ஏற்படும் பருக்கள், புண்கள் எளிதில் குணமடைய மாட்டாது.

நித்தமும் 'பம்பர்ஸ்'மாற்றும் போது சிறிதுநேரம் காற்று பட விடுவதன் மூலம் சருமநோய்கள வராமல் தடுக்கலாம்.

குழந்தைகளை தினமும் குளிப்பாட்டக்கூடாது. 2 நாட்களுக்கொருமுறையே குளிப்பாட்டவேண்டும் அல்லது சருமம் வறட்சித் தன்மையையடையும். புழுதியில் விளையாடியிருந்தால்

ஜெனி நாபல்
*JENI KNABAL*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னேரங்களில் குளிப்பாட்டலாம்.

குளிர்ந்த நீரையே பாவித்தல் உகந்தது. ஏதாயினும் விசேட கலவைகள் உபயோகித்தால் முகம் தவிர்ந்த பகுதிகளுக்கே பாவித்தல் வேண்டும்.

### காய்ச்சல் பற்றி சில குறிப்புகள்.

காய்ச்சல் ஒரு நோயல்ல, அது உடலின் பிரதிவினைவும், உடலுக்கு பாதுகாப்பு அளிப்பதுவுமாகும். சிலசமயங்களில் மற்றைய நோய்களுக்கெதிராகவும் செயற்படுகிறது.

காய்ச்சல் எத்தனை நாட்களுக்கு நீடிக்கின்றது என்பதைப் பார்த்தல் வேண்டும். (38 c - 39 c) க்கு மேலிருந்தால் குழந்தையை வைத்தியரிடம் அழைத்டசெல்வதுடன் அக்குழந்தையில் காணப்படும் நோய் அறிகுறிகளையும் வைத்தியரிடம் கூறல்வேண்டும்.

காய்ச்சல் அதிகமாக ஒரு தொற்றுநோயின அறிகுறியாகவேயுள்ளது.

காய்ச்சல் உள்ள குழந்தை படுக்கையில் இருப்பதுடன், ஒரு மணித்தியாலத்துக்கு ஒருமுறை காய்ச்சல் அளவிடப்படவேண்டும். அளவீடு கூடுதலாகவிருந்தால் வைத்தியரிடம் அழைத்துச் செல்லல்வேண்டும்.

அப்படியான வேளைகளில் அதிகமான நீராகாரம் அருந்தக் கொடுத்தல்வேண்டும். உ+ம்: Kamiliantee, Lindenblütentee.

பசியில்லாவிடின் உணவுவகைகள் கொடுக்கக்கூடாது. குழந்தையை முழுமையாகப் போர்த்துக் கொள்வதுடன், பின்னங்கால்களுக்கு ஒத்தடம் பிடிக்கலாம்.

### ஒத்தடம் பிடிக்கும் முறை.

இரண்டு சிறிய துவாய்களை குளிர்ந்த நீரில் நனைத்து, நன்றாக பிழிந்து குழந்தையின் இரண்டு பின்னங்கால்களிலும் ஒத்தடம் பிடிக்கவும். அதற்குப்பின் நீர்ப்பற்றற்ற துவாயால் ஒத்தடம் பிடிக்கவும்.

10 நிமிடங்களுக்குப்பின் Weleda Baby Cream ஐ பூசவும். ( இது எல்லா Apothek லும் கிடைக்கும்)



எண்ணெய் மற்றும் பவுடர் வகைகள் பாவித்தலைத் தவிர்க்கவும்.

அத்தகையவேளைகளில் தினமும் குளிப்பாட்டாமல், இரண்டு நாட்களுக்கொருமுறை செறிவற்ற கலவையில் குளிப்பாட்டவேண்டும்.

மென்மையான சருமமுள்ள குழந்தையாகவிருந்தால், எந்தவிதமான கிறீமும் தேவையில்லை. சருமம் தானகவே தனக்குப் பாதுகாப்பளிக்கும்.

குளிர்க்காலத்திலும், வெப்பம் கூடிய நாட்களிலும் முழு உடலுக்கும், முகத்திற்கும் கிறீம் பூகதல் வேண்டும்.

### பல் முளைக்கும் போது உண்டாகும் காய்ச்சல்.

வழக்கமாக ஒரு குழந்தைக்கு பல்முளைக்கும் போது காய்ச்சல் வருவதில்லை. சில குழந்தைகளுக்கு வருவதுண்டு, ஆனால் பயப்படவேண்டிய அவசியமில்லை.

பல் முரசைக் குடைந்து கொண்டு வெளிவரும்போது, கூடிய வலி ஏற்படும். உண்ணவு அருந்தவும் மனமில்லாத அவ்வேளையில் அன்பும், நித்திரையுமே சிறந்த நிவாரணமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தடுப்பூசிகள் பற்றி. விபரம்

| | |
|---|---|
| முதலாவது கிழமை | *காசநோய் தடுப்பூசி சில சமயங்களில் புதிதாகப்பிறந்தகுழந்தைக்கு இந்நோய் தொற்ற வாய்ப்புண்டு |
| 3 மாதங்களும் அதற்கு மேலும் | * தொண்டைக்கரப்பன், ஏற்புநோய், கக்குவான் ஆகியவற்றிற்கான தடுப்பூசி. 2 முறை இடைவெளிகளில் 4-8 கிழமைகளில் கொடுக்கப்படவேண்டும்.<br>* தொண்டைக்கரப்பன்,கக்குவான் 3 முறை இடைவெளிகளில் 4-8 கிழமைகளில் கொடுக்கப்படவேண்டும்.<br>* இளம்பிள்ளைவாதம் - உட்கொள்ளும் மருந்து முதலாவதையும், இரண்டாவதையும் சேர்த்து ஒரு கூட்டாக உட்கொள்ளலாம். அல்லது முதலாவதையும், மூன்றாவதையும் சேர்த்து உட்கொள்ளலாம். |
| 2 வயது | மூன்றாவது இளம்பிள்ளைவாதம் உட்கொள்ளும் மருந்தானது தொண்டைக்கரப்பன், ஏற்புநோய், கக்குவான் ஆகிய நோய்களை எதிர்க்கும் தன்மையை உடல் பெறுவதற்காக வழங்கப்படவேண்டும். |
| 6 வயது | மேற்கண்ட தடுப்பூசிகள் மீண்டும் வழங்கல்: உடலின் தடுப்பு நிலையை பரிசோதித்தப்பின் தடுப்பூசிகள் வழங்கப்படல்வேண்டும்.<br>* தொண்டைக்கரப்பன்- மீண்டும் ஏற்படுவதற்கான தடுப்பூசி.<br>* காசநோய்ப் பரிசோதனை, காச நோயிற்கான தடுப்பூசி, அந்நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கு வழங்கப்படல்வேண்டும். |
| 10 வயது | இளம்பிள்ளைவாதம்- உட்கொள்ளும் மருந்து. நோய் மீண்டும் ஏற்படுவதைத்தடுப்பதற்கு வழங்கப்படல்வேண்டும். ஏற்புநோய் தடுப்பூசி- மீளப்பெறுவதைத் தடுப்பதற்கு. |
| 11 வயதிலிருந்து 14 வயதுவரை | சின்னமுத்து தடுப்பூசி. பெண்குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே கொடுக்கப்படவேண்டும். |

(தொடரும்)

www.tamilarangam.net

# பாகிஸ்தான்

1988 ஆம் ஆண்டு புரட்டாதியில் ஆட்சிக்கு வந்த பெனாஸிர் 1990 ஆவணியில் ஆட்சி செய்யத் தகுதியற்றவர் என்று குற்றச்சாட்டின் பேரில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தனக்கு எதிராக இராணுவம் எந்த நேரத்திலும் சதி செய்யும் என்று எதிர்பார்த்திருந்தார் பெனாஸிர். ஆனால் ஜனாதிபதியே தன்னைப் பதவியிலிருந்து விலக்கியது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

பெனாஸிரின் பதவி நீக்கத்தோடு கூடவே பாராளுமன்றம், மாநில சட்டமன்றங்கள், முதலமைச்சர்கள், கவர்னர்கள் என்று அனைத்துமே ஜனாதிபதியினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. புரட்டாதி 24 ஆம் திகதி பொதுத் தேர்தல் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

லஞ்சம், ஊழல், தேசிய பாதுகாப்புக்கு விரோதம், இல்லாமிய மயமாக்கலுக்கு முட்டுக்கட்டை, திறமையின்மை, இன கலவரங்களைக் கட்டுப்படுத்தத் தவறியமை என்று பல குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப் பட்டுள்ளன. இந்தக்குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசேட நீதிமன்றங்கள் உருவாக்கப்படும் என இடைக்கால நிர்வாக அரசு அறிவித்துள்ளது.

பெனாஸிரின் தந்தையின் நண்பர்களும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர்களும் கூட நிர்வாக அரசில் அங்கம் வகித்திருப்பது அவருக்கு பலத்த அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

இராணுவம், ஜனாதிபதி, தனது ஆலோசகர்கள் என்று அனைவருமாக சேர்ந்து செய்த பயங்கர மோசடி இது என்று பெனாஸிர் அறிக்கை விடுத்துள்ளார். தான் ஆட்சிக்கு வந்த முதல் நாளிலிருந்தே தனக்கெதிரான குழிபறிப்பு வேலைகள் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டதாக இவர் கூறுவது ஏற்கக்கூடியதாகவே இருக்கின்றது.

பாகிஸ்தான் சுதந்திரமடைந்த 43 வருட காலத்தின் பெரும்பகுதிகள் இராணுவ ஆட்சியே நடைபெற்றது.

பாகிஸ்தானில் இராணுவம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மிகச்சக்தி வாய்ந்த ஒன்றாகவே இருந்து வருகின்றது. இவர்கள் பெரும்பாலும் செல்வந்தர்களின் பெண்களையே மணம்புரிகின்றனர். இவர்களுக்கும் பண முதலைகளுக்குமான நெருக்கம் ஒரு ஆளும் வர்க்கத்தை உருவாக்கிக் காத்திருக்கின்றது.

கடந்த மே மாதம் சிந்து மாகாணத்தில் கலவரங்கள் ஏற்பட்ட பொழுது அவற்றைக்கட்டுப்படுத்த பெனாஸிர் இராணுவத்தை அழைக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டார். இராணுவம் பெனாஸிருடன் பேரம் பேசியது. நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தமக்கு அதிக அதிகாரம் தேவையென்று கேட்டது. சிந்து மாகாணத்தில் இராணுவச்சட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. இவற்றுக்கு பெனாஸிர் மறுத்தார்.

காஸ்மீர் பிரச்சனையில் இந்தியாவுடன் ஒரு குறுகிய காலப்போரில் ஈடுபட இராணுவம் விரும்பியது. பெனாஸிர் அரசியல் தீர்வு ஏற்படுவதை விரும்பினார். இதன் காரணங்களால் தேசிய பாதுகாப்புக்கு விரோதமானவர் என்று முத்திரை குத்தப்பட்டார்.

« மயில்வாகனம் »

ஜனாதிபதிக்கும், இராணுவத்திற்கும் இடையிலான நெருக்கம் ஒன்றும் புதிய விடயமல்ல. சியா உல் ஹக்கினது காலத்திலேயே ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பெனாஸிருக்கு எதிரான அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டணியான இல்லாமிக் டி.ஏ இராணுவத்தோடு நெருங்கிய உறவை பேணிக் கொள்கிறது.

இந்த நிலமைகளின் மத்தியில் இராணுவப் புரட்சி ஏற்படுவதைவிட, மக்கள் மத்தியில் பெனாஸிருக்கெதிரான கருத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்று உருவாகுவதையே சதிகாரர்கள் விரும்பினார்கள். லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெனாஸிரின் கணவருக்கெதிராகவும், மாமனாருக்கு எதிராகவும் பகிரங்கப்படுத்தப்பட்டன(இவற்றை மறுப்பதற்கில்லை) பெனாஸிரின் ஆட்சியிலுள்ள குறைபாடுகள் மக்களுக்கு இனங்காட்டப்பட்டன.பெனாஸிரின் ஆட்சியை கவிழ்க்க சதிகாரங்கள் தருணம் பார்த்துக் காத்திருந்தார்கள். சர்வதேச சூழ்நிலை அவர்களுக்கு சாதகமாக அமைந்தது.

ஈராக்,குவைத்தை ஆக்கிரமித்தபோது மத்திய கிழக்கில் புதிய நெருக்கடி உருவானது. ஐ.நா சபையில் தீர்மானம் எடுக்க முன்னரே அமெரிக்காவும்,பிரித்தானியாவும் இராணுவமோதலுக்குத் தாயரித்துக் கொண்டன. இம்மோதல்களுக்கான சர்வதேச அங்கிகாரம் இவ்விரு நாடுகளில் தேவைப்பட்டன.

பாகிஸ்தானிய இராணுவத்துடன் அமெரிக்கா பேரம் பேசியது. தமது உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடாதிருந்தால் இராணுவ உதவி வழங்குவதாக இராணுவ அதிகாரிகள் அமெரிக்காவிற்கு வாக்களித்தனர்.

ஆகஸ்ட் 6 ஆந்திகதியன்று பல வதந்திகள் நிலவியதால்,தனது ஆள் ஒருவரை ஜனாதியதியிடம் அனுப்பினார் பெனாஸிர். "அரசியல் சாசனத்திற்கு விரோதமாக"தான் செயற்பட மாட்டேன் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். அன்று மாலையில் ஜனாதிபதியை



கடைசியாக சந்தித்தவர் அமெரிக்கத் தூதுவர் ராபர்ட ஒக்லே. இதனைத் தொடர்ந்து பெனாஸிரின் பதவி நீக்கம் அறிவிக்கப்பட்டது.

பெனாஸிரின் மெல்லிய தோள்களில் பதினெட்டு மாதங்கள் பயணம் செய்த ஜனநாயகத்தின் அரிச்சுவடிகள் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

---

"ஒருவன் மார்க்ஸிய உணர்வு பெற்றவன் என்பதை நாம் இந்த சமூக அமைப்பிலே எப்படி அடையாளம் காணமுடியும் தெரியுமா? அவன் எவ்வளவு மார்க்ஸிய புத்தகங்களைக் கரைத்துக் குடித்து தத்துவ விளக்கம் கொடுக்கிறான் என்பதை பொறுத்தோ, அல்லது எவ்வளவு மூர்க்கமாக கோஷம் போட்டு முதாலாளித்துவத்திற்கு எதிராக ஊர்வலம் போகிறான் என்பதைக் கொண்டோ அல்லது உங்களைப்போல உயிருக்கு அஞ்சாமல் ஆயுதம் ஏந்திப் போராடுகிறான் என்பதனால் மாத்திரமோ அந்த உணர்வு பூர்வமான அர்ப்பணிப்பை எடை போடமுடியாது.

பெண்கள் விடயத்தில் அவர்கள் சுதந்திர உணர்வுகளை எந்த அளவிற்கு மதிக்கிறான், அவர்கள் அடிமைத்தனத்தை விமோசனம் அடையச் செய்ய எந்தளவிற்கு அக்கறையெடுக்கிறான் என்பதையும் பொறுத்தே அவன் மார்க்ஸியத்தில் கொண்ட ஆழமான பற்றுதலையும், விசுவாசத்தையும் கூறமுடியும்.

'புதியதொரு உலகம்' என்ற நாவலிலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை.

# சீனிஐயா நாங்கள் இன்னும் சாப்பிடவில்லை.......

ப.வி சிறிரங்கன்.

மார்கழி மாதம்..... நன்றாக மழை பொழிந்து புளியங்கூடல் கிராமம் செழிப்பாக இருக்கிறது. அந்தக் கிராமத்தின்... வசதிபடைத்த விவசாயிகள் எல்லோரும் தமது நில புலன்களை உழுது பண்படுத்தி விதைத்து விட்டார்கள்; தோட்ட நிலங்களில் எல்லாம் புகையிலையும், மிளகாயும், வெங்காயமும் நடப்பட்டு செழிப்பாக வளர்ந்து பார்ப்பதற்கு அழகாய் இருக்கிறது. புகையிலைச் செடிகள், தம்பல் கொத்தப்பட்ட தோட்டங்களில் மிகவும் தெளிவாகத் தங்களின் அழகை வெளிப்படுத்திக் கொண்டு.... "காற்றினால் உந்தப்பட்டு, தங்கள் இலைகளை அசைத்து ஆராவாரம் செய்கின்றன. அந்த நிகழ்வு மனிதமனத்திற்கு எவ்வளவு நிம்மதியை; சந்தோஷத்தைத் தருகிறது... மிளகாய்ச் செடிகளில் பூத்திருக்கும பூவும்.... வெங்காயச் செடிகளின் ஒருவித மணமும்.... நெல்வயல்களில், நெற்பயிர்களின பசுமை நிறமும்... அப்பப்பா! இதுதாம் சொர்க்கமா...? புகையிலை, மிளாய்த் தோட்டங்களுக்கு தண்ணிகட்டும் போது, மனதுக்கு எவ்வளவு ஆனந்தம்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு இன்னும்... எவ்வளவு அழகாக இருந்தது இந்தக் கிராமம்.... எவ்வளவு அமைதி எவ்வளவு சந்தோஷம்.... எல்லாமே இப்போது... சோளகக் காற்றில் பறக்கும் இலவம் பஞ்சு போல் பறந்து போய்விட்டது. ஆனாலும்... அந்தக் கிராமம் தன் அழகை முழுமையாக இழந்து விடவில்லை. எவ்வளவுதாம் பிரச்சனைகள் உருவெடுத்துத் தலைவிரித்தாடினாலும் - மனிதர்கள் உயிரை, உடமைகளை பறி கொடுத்தாலும்.. மீதமாக இருப்பவர்கள்.. வாழ்ந்தாக வேண்டுமே! இதனால்... அழிக்கப்பட்டவை புனர்நிர்மாணம் செய்யப்படுவதும்... இயற்கைதானே?

புளியங்கூடல் சந்தியும், அதில் கூடும் அந்தக் கிராமத்து மக்களும் எவ்வளவு இன்னல்களை .. அழிவுகளை கண்டது: கண்டார்கள். இப்போது.. மீண்டும் மூச்சு விட்ட, நிம்மதி அடையப் பார்க்கிறார்கள். ஆனாலும்... மழை விட்டும் தூவானம் போகவில்லை. அண்ணனைத் தம்பியும்... தம்பியை அண்ணனும்.......

என்ன நம் நாடு?... என்ன நாம் மக்கள்.... எங்களுக்கு எப்போது வைகறை ஒளி நல்கும் ?.....

புளியங்கூடல் சந்தியிலிருந்து நானூறு யார் தொலைவிலிருக்கும் சின்ன மடுமாதா கோவில்... அந்தக் கோவில்தாம் இப்போது எவ்வளவு அலங்கோலமாய் போச்சு... அந்தக் கிராமத்து மக்களின் துயரத்தோடு சின்ன மடுமாதாவும் பங்கு கொள்கிறாள் போலும்! மாரி மழையால் சின்ன மடுமாதா கோவில் வளவு வெள்ளம் முட்டி "குளம்"போல் காட்சி அளிக்கிறது.... அவ்வப்போது அந்த வெள்ளத்திற்குள் குடும்பம் நடத்தும் தவளைகள் "கிணுங்....கிணுங்..." என்று கத்தித் தமது சுதந்திரத்தை பறைசாற்றிக் கொண்டன. மாதாகோயில் கணக்கர் வீட்டுப் புளியமரத்திலிருந்து சில பல் அணில்கள் தமது உறவை பலப்படுத்திக் கொள்ள சத்தம் செய்தன. அதே வளவுக்குள் இருக்கும் சின்னமடு "றோமன்கத்தோலிக்க கலவன் பாடசாலை" ஐந்து வருடங்களுக்கு முன் எவ்வளவு குதுகலமாகக் காட்சியளித்தது... அந்த வட்டாரத்தில் உள்ள சகல மக்களுக்கும் அது கல்விக் கண்ணை வழங்கியது. சகல குழந்தைகளும் ஆடிப்பாடி கொஞ்சிக்குலவி மகிழ்ந்து பயின்ற பாடசாலையின்று.... அலங்கோலமாய்... முழியாய்... பாடசாலையின் கல்வீட்டுப் பகுதி நிலம், குண்டும் குழியுமாய்... ஓலை வீட்டுப் பகுதி... கூரையிலுள்ள ஓலைகள் இற்று... மழை நீர் ஒழுகி... நிலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேறாகி... இப்போது வாயில்லா ஜீவன்களுக்கு அது பாதுகாப்பு - புகலிடம் வழங்கி கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

அந்தப் பாடசாலையின் முன்பாகச் செல்லும் ஒரு குச்சு ஒழுங்கையின் இரு மருங்கிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பல குடிசைகள்... இவற்றுக்கு மத்தியில் ஒரு முருகன் கோயில்... அந்தக் கிராமத்து மக்களுக்கு வரும், இன்ப துன்பங்களுக்கு எல்லாம் பொறுப்பாக - சின்ன மடுமாதாவும், முருகனும் தலைமையேற்றிருந்தார்கள்.

பதிவான நிலப்பகுதிக்குள் அகப்பட்ட அக்குடிசைகளெல்லாம் "மாரிமழையின்" நீரில் மிதக்கும் நிலைக்கு உருவாகியிருந்தன. அந்தச் சூழல் கப்பல் துறை முகத்தில் கப்பல்கள் நங்கூரமிட்டு நிற்பது போல் குடிசைகளெல்லாம் காட்சி தந்தன.

அப்படிப்பட்ட குடிசைகளில் ஒன்றிலிருநது....

அம்மா பசிக்குதம்மா!

அம்மோய்... பசிக்குதம்மா!!

அம்மோய்... இன்னும் பதினஞ்சு நாள்தானம்மாயிருக்கு...

தை பொங்கல் வரப் போகுதம்மா... வெடிவேண்ட வேணுமண... பொங்க வேணுமண...

ஐயோ பசிக்கிறது இப்ப... ஐயோ...!

ஏனடா...ஏனடி... கத்தித் துலைக்கிறீங்க...?

கொப்பனா இருக்கிறான்... வேளா வேளைக்கு நான் அவிச்சுப் போடவும்... நீங்க ஆசைப்படுவதைச் செய்யிறதுக்கும்...அவனாத்தான்... கலவரமெண்ட இயமன் வந்து கொண்டு போய்விட்டானே... ஐயோ!

புனிதம் அழுது புலம்பிக் கொண்டு குழந்தைகளை கட்டித் தழுவிக் கொண்டாள்.

பாடசாலையிலிருந்து வந்த குழந்தைகள் வந்ததும் வராததுமாய் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சாப்பாடில்லை; சமைப்பதற்கு எதுவும் இல்லாததால் புனிதம், எங்கெல்லாமோ திரிந்துபார்த்தாள் எவருமே இரங்கவில்லை... தெரிந்த வீடுகளிலெல்லாம் காசு பத்து ரூபாய்கு அலைந்தாள்... எவரும் பணம் கொடுக்கவில்லை. கடைசியில்..."ரெண்டு போணி அரிசியாவது கிடந்தால் தாருங்க...கூப்பன் எடுத்துத்தாறன்...." என்றும் கேட்டுப் பார்த்தாள். எவருமே.... . இதனால்... அவள் இன்று குழந்தைகளுக்கு என்னதான் கொடுப்பாள்? பாவம்! புனிதமும் குழந்தைகளும் பாவமா, இல்லை, இந்த நாட்டு அரச அமைப்பு பாவமா ?

இலங்கையில் பல் தேசிய கம்பனிகளெல்லாம்... எப்படியெல்லாம் இலாபம் எடுக்கின்றன. இங்கிருந்து போகும் செல்வங்கள்... சம்பந்தப்பட்ட நாடுகளில் தமது மக்களை ஆடம்பரமாக வாழ வைத்துள்ளது. இங்கோ... எமது மழலைகள் ஒரு நேரம் உண்டால் மறு நேரம் உணவு கிடைக்குமா கிடைக்காதா என்று ஏங்கும் நிலை. ஏன் இப்படி...

சின்னராசா!

சின்னராசா!!

என்ன குஞ்சு இஞ்ச வாடி...

புனிதம்தன் இரண்டாவது மகளைக் கூப்பிட்டாள்.

"என்னனணை... எனக்கு பசிக்குதணை..."

"தம்பி... நீ, சீனிஐயா வீட்ட ஒருக்காப்போய் பாக்கிறியாடா... அவர், அவர் கொழும்பால இருந்து பொங்கலுக்கு... வீட்ட வந்திருப்பார்... போடி... தம்பி ரவியையும் கூட்டிக் கொண்டு போய்யா துணைக்கு... புனிதம் தன் மகனை மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

போன கிழமைதானேயம்மா போனனான்... சீனியம்மா அவர் வரவில்லை எண்டு சொன்னவா... போணயம்மா.. நான் போகமாட்டன். அங்க அவற்ற சொந்தக்காறர் நிறையப் பேர் அவர் வீட்டில நிற்பினம்... எனக்கு வெக்கமாய் இருக்கன...!

சொந்தக்காறராக இருந்தாலும் அவர்களை அறிமுகமில்லாமல் - பழக்கமில்லாமல் பார்க்கும் போது கூச்சமாகத்தானே இருக்கும். குழந்தை சின்னராசாவுக்கும் அப்படித்தான் இருக்கும் போலும்.

என்ர குஞ்செல்ல... போய்யா! அடேய்..அவர்ஆற்றா? அன்னியனா? இல்லையே! உன்ர அப்பனோட கூடப்பிறந்தவன்தானே! இப்ப பெரிய பணக்காரன்... கொழும்பில பெரியகடையள்... வைச்சிருந்தாலென்ன? எப்படியும் உனக்கவர் சித்தப்பாவடா! அவரட்ட எங்கட கஷ்டத்தைச் சொல்லி... காசு கேளடா தம்பி சீனி ஐயா... நாங்கள் சாப்பிடக்கூட ஒண்டுமில்லை பள்ளிக்கூடம் போக புத்தகம்... கொப்பி வேண்ட வேணும்... எண்டு சொல்லி காசு கேட்டுப்பார் தம்பி.

புனிதம் குடும்ப கஷ்ட நிலையால் தன் கணவனின் தம்பியாரிடம் பணம் வேண்ட குழந்தைகளை ஒருவாறு சமாளித்து அனுப்பி வைத்தாள். தன் குழந்தைகளின் கோலத்தைப் பார்த்தாவது... அந்த புண்ணியவான் மனம் இரங்கினாலும் இரங்குவார் என்ற நப்பாசையில் அனுப்பி வைத்தாள்.

புளியங்கூடல் கிராமத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் இருக்கும் "காரம்பொன்" கிராமத்திற்கு குழந்தைகள் சின்னராசாவும், ரவியும் கால்நடையாகக்

www.tamilarangam.net

கிளம்பினார்கள்.

*　　*　　*

புனிதம், சீவரத்தினம் தம்பதிகளுக்கு ஏழு குழந்தைகள் மூத்த பொடியன் ராகவுக்கு வயது இருபத்திமூன்று; இரண்டாவதும் ஏழாவதும் பெண் குழந்தைகள். மூத்த பெண்ணுக்கு வயது இருவத்தியொன்று, கலியாணம் செய்து தனிக்குடித்தனம் போய்விட்டாள். கடைக்குட்டிப் பெண்ணுக்கு வயது ஆறு. மற்றும் மூன்றாவது பையன் சின்னராசாவுக்கு வயது பதினைந்து. நான்காவது பையன் ரவிக்கு வயது பதின் மூன்று. ஐந்தாவதும் ஆறாவதும் இரணைகள், வயது ஒன்பது. இதுதான் அவர்களின் குடும்ப விபரம். இரண்டாண்டு முன்பு சீவரத்தினம் எமலோகம் போய்விட்டார். சிவரத்தினம் ஒரு விவசாயி! அவரிடம் நாலாயிரம் புகையிலைக்கண்டு நடக்கூடிய ஒரு தோட்டமுண்டு. அதில் புகையிலை, மிளகாய் நாட்டி குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டு வந்தார். தோட்டவேலை ஆறு மாதம்தான். பின்பு புகையிலைக் கிட்டங்கி முதலாளிமாரின் வீடுகளில் புகையிலை தெரியப்போய் உழைப்பார் மனிதன். இப்படி ஒரு முறை பருத்தித்துறைக்கு புகையிலை தெரியப் போன இடத்தில் - இரண்டு வருடங்களுக்கு முன்பு - அங்கு ஏற்பட்ட அழிவில் சீவரத்தினம் கூட... தனது நாற்பத்தி ஐந்தாவது வயதில் காலன் கையில் சிக்குண்டார்.

புனிதத்தின் காசமரம் பட்டுப் போனபின் புனிதமும் குழந்தைகளும் படாதபாடு படுகுதுகள். ஒரு நாள் உணவுக்குக்கூட வருமானமில்லை. இந்த நிலையில்தான் "ஓ/எல்" படித்துவிட்டு பாடசாலைக்கு "டட்டா" காட்டின மூத்த மகன் ராகவை வெளிநாட்டுக்கு அனுப்பித் தங்களின் வறுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கவெண்ணி, புனிதம் தன் காதில, மூக்கில கழுத்தில கிடந்ததுகளையும், விவசாயம் செய்யும் தோட்டக் காணியையும் விற்று இரண்டு லெச்சம் கட்டி கனடா அனுப்ப ஏஜன்சி மூலம் எல்லா ஒழுங்கும் செய்தாள்.

ஏஜன்சிக்காரன் "பாலைப்பழம் போல" பணம் இரண்டு லெச்சத்தையும் வேண்டிக் கொண்டு புனிதத்தின் மகன் ராகவை இந்தியாவிற்கு கூட்டிக்கொண்டு போய் அங்கு மூன்று மாதம் வைத்துப் பேக்காட்டி விட்டு மெல்ல மாறிவிட்டான். பின்பு ராக எப்படியோ கஷ்டப்பட்டு பிறந்தகம் வந்து சேர்ந்தான். மற்றைய குழந்தைகள் வயிறு நிரம்பிய நேரம் பாடசாலைக்குப் போவார்கள்; வயிறு நிரம்பாவிட்டால் படுத்துத் தூங்குவார்கள்.

பேச்சுக்குப் பலர் கூறுவார்கள்.."கடலைக்கொட்டை வித்தவன் ஜனாதிபதியானான்; தெருலாலம்பு வெளிச்சத்தில் படித்தவன் பெரிய வக்கீலானாற்.." என்று. அதெல்லாம் இந்தக் குழந்தைகளின் சூழ்நிலையில் முடியாத காரியம். இவர்களுக்கு ஒரு நேர உணவு கிடைப்பதே பெரிய திண்டாட்டம்!

"அம்மோ! அம்மோய்... என்னணை செய்யிறாய்...ஏதன் சமச்சியாணே..பசிக்குதம்மா." மூத்தவன் ராக வழமையான பல்லவியுடன் வீட்டுக்குள் நுளைந்தான்.

"............."

புனிதம் உரலுக்குள் கொஞ்ச பனங்கிளங்கு ஒடியலைப போட்டு இடித்துக் கொண்டிருந்தாள். ராகவின் கேள்விக்கு மௌனமே பதிலாக இருந்தது.

"என்னணையம்மா....பசிக்குதணை.."

"டேய்...! போடா தம்பி போய் குசினிக்க கீரை இருக்கு அதை துப்பரவு செய்யய்யா... குஞ்சுக்கு நான் ஒரு நிமிஷத்தில கூழ் காச்சிதாறன்."

"என்னணையம்மா இனித்தான் கூழ்காய்ச்சப் போறியா...?"

"தம்பி..வீட்டு நிலைமை தெரியாம... கத்தாதய்.. நாங்கள் எவ்வளவு கஷ்டத்தோட வாடுகிறமென்டு நீ... கொஞ்சம் கூட சிந்திப்பதாகத் தெரியவில்லை. வயது வந்த பிள்ளை நீ...வீட்டுப் பாரத்தை சுமக்கிற வயதில் உன்பாட்டுக்கு எதுவும் யோசிக்காம திரியிறாய்..."

"நிறுத்தணை... அறுந்த போன வீட்டில நிம்மதியும் துலைஞ்சு போச்சு! பசிக்குதெண்டால்... நீ ஏதோ லெக்சர் அடிக்கிறாய்... என்னை எற்னதான் செய்யச் சொல்லுகிறாய்...? பேசாமல் இந்தியாவிலேயே நின்டிருக்கலாம் போல ஒருக்கு."

"தம்பி ராக! இந்த வீட்டில உழைக்கக் கூடியவன் நீ... ஒருவன்தானே ஐயா. அம்மாக்கு ஆரடி உழைச்சுத்தாறது...? மற்றப்பிள்ளையள் எல்லாம் கடகத்துக்க அள்ளின தவ்வல்கள்... உன்ர காலம்.. ஏன் எங்கட காலம், பாழாய்ப்போன ஏஜன்சிக்காரன் ஏமாத்திப்போட்டு மறைஞ்சுட்டான்." புனிதம் உரலுக்குள் உலக்கையை வைத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினாள்.

"அம்மா...! ஏனணை அழுகிறாய்..?" ராக வாஞ்சையுடன் தாயை தழுவிக் கொண்டான்.

"என்ர குஞ்சு.., நீ கரம்பொனுக்கு ஒருக்காய் போய் சீனிஐயா வந்திருந்தால் அவற்றை காவிலை விழுந்தாவது கடையில போய் நிண்டு உழைச்சுத்தாய்யா!" புனிதம் தன் ஆத்தாக்

www.tamilarangam.net

கொடுமையால் - துயரத்தின் கர்ண கொடூரத்தால்... இதைவிட வேறு எதுவும் பேச முடியவில்லை.

"உனக்கண போகப் போக விசர் பிடிக்குது போலக் கிடக்குதண... இல்லாட்டி கடையில போய் நில்லெண்டுவியே...? கொழும்புக் கடைக்காறர்களைப் பற்றி உனக்கொண்டும் தெரியாது! அவர்கள்... இயமனுக்கு பச்சடி கொடுப்பார்கள். கடையில நிற்கிற பொடியன்களைக் கேட்டுப்பார்த்தாத் தெரியும், அவங்கடை சித்திரவதைகளை... இருபத்திநாலு மணி நேரமும் கடைக்குள்ள தான் வாழ்க்கை... அங்கால இங்கால போக விடமாட்டாங்கள்... கொத்தடிமை மாதிரித்தான் வைச்சிருப்பாங்கள்... இப்படிப் போயிற்றுதே! ஏழு பிள்ளைகளும் நானும்... நல்லதங்காவின் வறுமையிலும் மோசமாகப் பட்டுத்தெளியுறோமே! இதற்கொரு முடிவுகட்ட மாட்டாயா..? கூப்பன் அரிசியும் இல்லையெண்டால்.. நானும் என்ர பிள்ளைகளும் நல்ல தங்காளைப் போலவே கிணத்துக்க விழுந்து சாக வேண்டும்... கடைசியில் நீ வந்து காப்பாத்திறியோ இல்லையோ யாரு கண்டார்? ... இல்லையெண்டால் நானும் என்ர பிள்ளையளும் படும் கஷ்டம் உனக்குத் தெரிந்திருக்குமே...!"

பாவம்! புனிதத்திற்கு கடவுள் மீதுதான் கோபம்...அவளுக்கு தாங்கள்படும் துன்பத்திற்கும்,



வேலைக்காரங்களை... இப்படியெல்லாம் சித்திரவதை செய்து கொண்டு மாசத்திலை நாநூறு அல்லது ஐந்நூறு ருபாய்தான் சம்பளம் தருவார்கள்.

ராஸ்கல்கள்...! ராகவின் முகத்தில் தீ எரிந்து கொண்டு இருந்தது. ராஸ்கல்கள் .." எனறு சொல்லிக் கொண்டு மீண்டும் தொடர்ந்தான்.

"உனக்கென்னண தெரியும் அவங்களைப்பற்றி... அவங்கள் வேலைக்காரங்களை மட்டும் ஏமாற்றவில்லை... வருமானவரி இலாகாவுக்கே தண்ணி கட்டுறாங்களாம்! இவங்கட கையில இருக்கிற கறுப்புப் பணத்தால தான் எல்லாமே விலையாப் போச்சு."

"தம்பி.. அவங்களை குற்றம் சொல்லி நீ.. தப்பிக்காத... நாங்கள் பசியில கிடந்து வாடறதுக்கு உன்னால உழைச்சு வறுமையைப் போக்க முடியாட்டி சும்மா இரு... மற்றவங்களைப் பற்றிப் பேசிப் பயறில்லை...ஐயோ ! பரமசிவனே... என் நிலமை சாப்பாடடுச் சாமான் விலையேற்றத்திற்கும் கடவுள் தான் காரணமென அறிவு காட்டுகிறது... என்ன செய்ய... அவள் உலகம் அது! ஏன்... நாட்டில் தொண்ணூறு வீதமான பெண்களின் நிலையும் இதுதானே...?

தாயின் அழுகையைக் கண்ட ராகவிற்கு மனம் நெகிழ்ந்து போச்சுப போலும்... அவன் குசினிக்குள் கிடக்கும் கீரைகளை எடுத்துகாம்புகளை உடைத்து சுத்தம் செய்து கொண்டு என்னென்னாமோ சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் துப்பரவு செய்யும் கீரை... கடையில் வாங்கும் கீரையல்ல; தோட்டக் காணிகளுக்குள் தானாக முளைக்கும் "குப்பைக்கீரை"! கீரை வேண்டுமளவுக்கு அவர்களெல்லா வசதியானவர்களா?

* * *

கரம்பொன். படித்தவர்கள், பணக்காரர்கள் பலர் வாழும் ஒரு கிராமம். அதனால் எங்கு பார்த்தாலும்

www.tamilarangam.net

கல் வீடுகள் வரிசையாக, கம்பீரமாக காட்சியளிக்கும். ஏழைகள் அந்தக் கிராமத்தைப் பார்க்கும் போது பெருமூச்சு விட்டுக் கொள்வார்கள். தாங்களும் இப்படி வசதியாக வாழ முடியாதோ என்றெண்ணி ஏங்கித் தவிப்பார்கள். என்ன செய்ய... இன்றைய சமூகம் ஒரு பிரிவை, ஆளுமையுடயவர்களாகவும், இன்னொரு பிரிவை ஆளுமையுடைய சமூகத்திற்கு இரையாக்கியும் வைத்துள்ளது! 'காண்டேகர்'சொல்வது போல் "இச் சமூக அமைப்பு மாறத்தான் வேண்டும்; இல்லையேல் மாற்றவேண்டும்"

கரம்பொன் முருகமூர்த்தி கோவிலுக்கு முன்பாகச் செல்லும் வீதியில் முதலாவதாக வரும் பாரிய மாளிகைக்குள் தவராசா முதலாளி நீட்டி நிமிர்ந்து சாய்மனைக் கட்டிலில் கிடந்து கொண்டு பால்பாயாசம் பருகிக் கொண்டு மனைவியார் லக்ஸ்மி மூலம் ஊர் நடப்புக்கள் அறிந்து கொள்கிறார்.

சுவார்சியமாய் அவர்களின் பேச்சுக்கள் நடந்தன. யார்...யார் என்ன செய்தாங்கள்... எங்கெங்கு காணிகள் விற்கக் கிடக்கிறது என்றதில் தொடங்கி கடைசியில் லக்ஸ்மி அம்மையார் இப்படித் தொடங்கினார்..

"இஞ்சருங்கோ அப்பா! போன கிழமை உங்கட கொண்ணர் சீவரத்தினத்தின்ர பொடியள் இரண்டு வந்தாங்கள்...உங்களைத் தேடி..."

"ஊம்... என்னவாம்...?" தவராசா முதலாளி முகத்தைச் சுழித்துக் கொண்டு கேட்டார்.

"எனக்குத் தெரியுமா...? அதுகள் ஏன் வந்திருக்கும்... காசு வேண்ட வந்திருக்குங்கள்...." என்று கூறி வாய் மூடவில்லை, அதற்குள் 'கேற்றி'ல் நின்று சின்னராசாவும், ரவியும்,

"சீனி ஐயா...சீனி ஐயா இருக்கிறாரா" என்று குரல் கொடுத்தார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த தவராசா முதலாளி வேலைக்காரப் பையனை அனுப்பி அவர்களை உள்ளுக்குள் வரச் சொன்னார்.

"வாங்க மிஸ்டர்... என்ன இஞ்சாலப் பக்கம் ?" தவராசா முதலாளி நக்கலாகக் குழந்தைகளைப் பார்த்துக் கேட்டார்.

"சும்மா வந்தனாங்கள் சீனிஐயா..." மூத்தவன் சின்னராசா இப்படிக் கூறினான்.

"சும்மா வரமாட்டிங்க... விசயத்தோடுதான் வந்திருப்பீங்க... என்ன விசேசம்...?"

"சீனிஐயா... நாங்கள் இன்னும் சாப்பிடவில்லை... பள்ளிக்குப் போகப் புத்தகம் கொப்பியில்லை... காசு..." சின்னராசா அழுது கொண்டு வார்த்தையை முடிக்கவில்லை.

"அதுக்கு என்னடாப்பா செய்யிறது ? நானும் இன்னும் சாப்பிடவில்லை... அது சரி... உங்கட மூத்த கொண்ணன் என்ன செய்யிறான்?"

"அண்ணை வெளிநாடு போகக் காசுகட்டி இந்தியா போய் ஏமாந்து திரும்பி வந்திட்டார். இந்தியாவில காசு எல்லாம் தொலைஞ்சு போச்சு... இப்ப சும்மாதான் வீட்டில நிற்கிறார். சீனிஐயா வீட்டில பெரிய கஷ்டம்... காசு வேணும்... "

"தைப்பொங்கலுக்கு வெடிவேண்ட எனக்கும் காசு தாங்க..." ரவி, சின்னராசாவின் முதுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு சித்தப்பாவிடம் காசு கேட்டான்.

"சாப்பிடக் காசு; வெடி வேண்டக் காசு; படிகக் காசு ; எல்லாத்துக்கும் காசு வேணுமா...? அது சரி... உங்கட கொண்ணனுக்கு, உங்களுக்கெல்லாம் உடம்பு சொத்தியா, முடமா ?" தவராசா முதலாளி இப்படி குழந்தைகள் மீது ஏறிவிழுந்தார். குழந்தைகள் விக்கி, விக்கி அழுது கொண்டு நின்றார்கள்.

"போங்கடா! இஞ்ச என்னட்ட காசில்லை... கொண்ணர் இந்தியாவில தொலைச்ச காசு ...இலங்கைக்கு வரும் ... அதை எடுத்துச் சாப்பிடுங்க... படியுங்க. இப்ப எனக்கு நேரமில்லை... போயிட்டு வாங்க." புண்ணியவான், இப்படிக் கூறிவிட்ட சாய்மனைக் கட்டிலைவிட்டு எழும்பி வீட்டுத் தோட்டப் பக்கம் போனார். அவருடைய செயலைப்பார்த்து, அவர் வளர்க்கும் நன்றியுடைய நாலுகால் பிராணிக்குக் கூடப் பிடிக்கவில்லை. அது அவரைப்பார்த்து உறுமிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகளை படலை வரை வந்து வழியனுப்பிவிட்டு, அவர்கள் அழுது கொண்டு செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றது. #

முற்றும்.

(பாத்திரங்கள், சூழ்நிலை யாவும் கற்பனை)

---

(16ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெங்கன் ஒப்பந்தம் மொத்தத்தில் ஐரோப்பாவில் இனவாதத்தை வளர்கவும், ஐரோப்பிய நாடுகள் சுரண்டி வாழ்ந்த ஆசிய ஆபிரிக்க நாடுகளின் மக்களுக்கு எதிராகவும் செயற்படப் போகிறது எனபதும் தெளிவாகின்றது.

ஐரோப்பிய இனவெறி எதிர்ப்பாளர்களுக்கு இது ஒரு சவாலாக அமைகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏகாதிபத்தியத்தின் முற்றுகை

பாரசீகவளைகுடாவில் யுத்தமேகங்கள் திரண்டிருக்கின்றன. மூன்றுவருடங்களுக்குள் இரண்டாவது முறையாக ஏகாதிபத்திய நாடுகளின் கடற்படைகள் அராபியக் கடற்பிராந்தியத்தில் குவிக்கப்பட்டுள்ளன

இதற்கு: குவைத்தின் சுயநிர்ணய உரிமையைக் காப்பாற்றுவது, சர்வதேச சட்டங்களை நிலைநாட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் படைகளினால் ஈராக்கின் ஆக்கிரமிப்பை முறியடிப்பது போன்ற பல காரணங்கள் மேற்கு நாடுகளினால் கூறப்பட்டாலும், அடிப்படையான காரணம் ஏகாதிபத்திய நலன்களைக் காப்பாற்றுவதேயாகும்.

மத்திய கிழக்கு, கேந்திர முக்கியத்தும் உள்ள பிரதேசமாக இருப்பது மட்டுமன்றி, உலகிற்கு மிகவும் அத்தியாவசியமான மூலப் பொருளான எண்ணெயின் பெரும் பகுதியையும் கொண்டிருக்கின்றது.

மத்திய கிழக்கில் ஏகாதிபத்திய தலையீடானது, "ஐக்கிய நாடுகள் படைகள்" என்ற போர்வையில் (1950களில் வடகொரியாவிற்கு எதிரான ஆக்கிரமிப்பு யுத்தம் போல) ஏற்பட்டிருந்தாலும், இன்று அது ருசியா, சீனா ஆகிய நாடுகளின் ஆதரவுடன் (கியுபாவின் நடுநிலைமையுடன்!) ஏற்பட்டிருப்பதுதான் வெட்கக்கேடான விடயமாகும். அதற்கும் மேலாக ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளைகளான அராபிய நாடுகளின் ஆதரவும் இந்த முற்றுகைக்குக் கிடைத்திருக்கின்றது.

வளைகுடா நாடுகளின் தலைவர்கள் (அராபிய எமீர்கள்), அமெரிக்காவின் ராணுவத்தளமாக மாற்றப்பட்டிருக்கும் சவுதிஅராபியா, உலகில் இஸ்ரேலுக்கு அடுத்தபடிபெரும் தொகையான அமெரிக்க உதவியைப் பெறும் எகிப்து, மேற்குசகாராவை தன்னுடன் வலிந்திணைத்துக் கொண்ட

« பரா »

மொரக்கோ, அமெரிக்க தாசர்களான ராணுவதலைவர்களைக் கொண்ட பாகிஸ்தான், தனது பொருளாதாரப் பிரச்சனைகளின் தீர்வுகளுக்கு சவுதியையும் குவைத்தையும் நம்பியிருக்கும் சிரியா(!!!); ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் அடங்கும்.

www.tamilarangam.net

இந்த மத்தியகிழக்கு ராணுவ முற்றுகைக்கான செலவு, மாதமொன்றிற்கு ஒரு பில்லியன் டாலர்களாகும் [1]

எல்லாவிதமான நவீன கொலைக்கருவிகளும் அங்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. 17 வருடத்திற்கு முன்பு வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய படையெடுப்பின் பின் பாரிய அளவில் இந்தப் படையெடுப்பு நடைபெற்றுள்ளது

வியட்நாமிய மக்களின் புரட்சிகரப் போராட்டத்துடன் முதலாளித்துவ சர்வதிகாரியான சதாம்ஹுசேனின் ராணுவ ஆக்கிரமிப்பை ஒப்பிட முடியாது. ஆனால் இது ஒரு பிரதேசமுதலாளித்துவ அரசுக்கு எதிரானது என்பதால் ஏகாதிபத்தியத்தின் மாபெரும் ராணுவ முற்றுகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது இருந்துவிடவும் முடியாது.

ஏகாதிபத்திய சக்திகளும் அவர்களுடைய தாசர்களும், தமது நலன்களுக்கெதிராகச் செயற்பட முனையும் மூன்றாவது உலக முதலாளித்துவ ( அல்லது குட்டி முதலாளித்துவ) தலைமைகளை "கிட்லர்"களாக வர்ணிப்பது அரசியலில் சகஜமாகிவிட்டது!

அன்று: ஆஜன்டீனாவில் பெரோன், எகிப்தில் நாசர், அல்ஜீரியாவில் எவ்.எல்.என். தலைவர்கள்; இன்று: லிபியாவின் கடாபி, சிரியாவின் எல் அசாட், பாலஸ்தீனிய யசீர் அரபாத், ஈரானின் அயத்துல்லா கோய்மேனி...ஈரக்கின் சதாம் ஹுசேன்!

இவர்களுடன் முரண்பாடுகள் ஏற்படும் பொழுது இவர்களை "கிட்லர்" என தமது மக்களுக்கு விபரிக்கும் மேற்கு நாடுகள் தம் மத்தியில் பயங்கரமான "கிட்லர்"களை வளர்த்துக் கொண்டிருக்கின்றன

## சர்வதிகாரி சதாம் ஹுசேன்.

1968ல் இடதுசாரி ஆயுதப்போராளிகளினதும் இடதுசாரி கம்யூனிஸ்டுகளினதும் ஆயுதப்புரட்சியை ஒடுக்குவதற்காக ராணுவப்புரட்சி மூலம் பதவிக்கு வந்த சதாம் ஹுசேன், 1969_79களில் சகல எதிர்கட்சிகளையும் ஒழித்து தன்னை ஒரு சர்வதிகாரியாக்கிக் கொண்டான். குருதிஷ் மக்களின் புரட்சிவாதிகள், சகல கம்யூனிஸ்ட் கட்சிகள், தன்னுடைய கட்சிக்குள் தன்னை எதிர்த்தவர்கள் எல்லோரையும் இரத்த வெறியுடன் ஒடுக்கினான். சதாம்ஹுசேனின் சர்வதிகாரம் குடும்ப தொடர்புள்ள அதிகாரிகள், ராணுவம் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கின்றது. சர்வதிகாரகத்தை நிலைநிறுத்தும் அதிகாரிகளுக்கு அதிகமான சலுகைகள் கொடுக்கப்படுகின்றன.

ஈராக்கின் பொருளாதாரம் அது ஏற்றுமதி செய்யும் எண்ணெயில் தங்கியிருக்கின்றது. தேவையான உணவின் பெரும் பகுதியை அந்த நாடு இறக்குமதி செய்கின்றது. இதற்காகும் செலவுகளுடன்; அரசியல் எதிர்ப்பு சக்திகளையும், குருதிஷ் சிறுபான்மையினரையும் ஒடுக்குவதற்கும் அயல் நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட குரோதங்களினால் ஏற்பட்ட ராணுவதேவைகளுக்கான செலவுகளும் அதிகரித்தன. இந்தச் செலவுகளை சமாளிப்பதற்கு 1974களில் ஏற்பட்ட எண்ணெய் விலையேற்றததைப் பாவித்து தன்னை ஸ்திரமாக்க


---

1 பில்லியன்=1,000,000,000 (நூறுகோடி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சதாம்ஹுசேனினால் முடியவில்லை.

காரணம்; அக்காலத்தில் அவனை பலவினமாக்கும் நோக்கத்துடன் ஈரானிய ஷாமன்னனும் அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈராக்கிலுள்ள குருதிஷ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளித்து ஊக்குவித்தன.

சதாம்ஹுசேன் தோல்வியைத் தழுவுவதிலிருந்து தப்புவற்காக, ஈரானுடன் அதற்குச் சாதகமான (கடல் நிலப்பரப்புக்களை விட்டுக் கொடுக்கும்) ஒப்பந்தம் ஒன்றை 1975ல் (அல்ஜீரில் ஒப்பந்தம்) செய்து கொண்டான். இதனால் ஷாமன்னன், குருதிஷ் மக்களுக்கு கொடுத்த உதவிகளை நிறுத்திக் கொண்டான். குருதிஷ மக்களுடைய போராட்டம் தோல்வி கண்டது.


தொடர்ந்து கிடைதத எண்ணெய் வருமானத்தில் ஈராக் தொழில் ரீதியாக அபிவிருத்தியடைந்தது. கல்வி, சமூக – பொருளாதார வளர்ச்சிகளும் சமயபிற்போக்குத்தனங்களை கடந்து பெண்களின் வாழ்க்கை முறைகளில் முன்னேற்றங்களும் ஏற்பட்டன.

www.tamilarangam.net

இந்த முதலாளித்துவப் பொருளாதார சமூக மாற்றங்களுடன், நவீன ஆயுதங்களைக் கொண்ட அரசயந்திரமும் தன்னை ஸ்திரமாக்கிக கொண்டது. மேற்கு நாடுகள் பெற்றோல்_டாலர்களைப் பெறுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களை விற்பனை செய்தன.

1979ல் ஷா மன்னனின் வீழ்ச்சியின் பின் ஈரானிய ராணுவத்தில் ஏற்பட்ட குழப்ப நிலைமைகளையும் அமெரிக்காவுடன் ஏற்பட்ட விரோதத்தையும் பாவித்து ஈரான் மீது சதாம்ஹுஸேன் தாக்குதல்களை ஆரம்பித்தான். அவனின் முக்கிய நோக்கம் 1975 அல்ஜீரில் ஒப்பந்ததினால் இழந்த பிரதேசங்களை மீட்டெடுப்பதும்; ஈரானின் முக்கிய எண்ணெய் வளத்தைக் கொண்டதும், சிறுபான்மையினராக அராபியர்கள் வாழும் ஈரானின் ஒரு பகுதியான "அராபில்தானை" ஈராக்குடன் இணைத்துக் கொள்வதுமேயாகும். இதன் மூலம் ஈராக்கை உலகின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி நாடாக்க அவன் முயன்றான். ஆனால் 1982ல் இந்தப் போர் ஈராக்குக்குப் பாதகமாகத் திரும்பியது. 1988ல் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.

இந்தப் போரில் ஈராக்கில் 300,000 மக்கள் இறந்தனர். காயமடைந்தவர்கள், அனாதையானவர்கள் தொகை இதிலும் பன்மடங்காகும். இதற்கான ராணுவச் செலவு 250 பில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இதில் 60 பில்லியன் டாலர்கள் வெளிநாட்டுக் கடன்களாக இருந்தது. [illegible] ஒரு நிலையான சமாதானம் ஏற்படாதபடியால ராணுவபலத்தை குறைக்க முடியாமலும் இருந்தது. 17 மில்லியன் மக்களுக்கு ஒரு மில்லியன் ராணுவத்தினர் இருந்தனர். இஸ்ரேல் போலவே ஒரு "யுத்த சந்தை" நாடாக ஈராக் உருவாகியிருந்தது.




விளைவு.

## ஆக்கிரமிப்பு

1990 ஆகஸ்ட் 2ம் திகதி ஈராக் ராணுவம் குவைத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. உலகின் பலபாகங்களிலும் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புக்களைச் சமாளிக்க சில நிபந்தனைகளுடன் தான் ராணுவத்தை மீளப் பெறுவதாகவும் தெரிவித்தது. சதாம் ஹுஸேனின் ஆதரவாளர்களான ஜோடானிய மன்னன் ஹுஸெயினும், பாலஸ்தினிய விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தும் இவ்வாறான ஒரு தீர்வுக்கு முழு முயற்சிகளையும் எடுத்தனர். எந்த வித தீர்வுகளுக்கும் அராபிய நாட்டுத் தலைவர்கள் சம்மதிக்க விடாமல் உலக ஏகாதிபத்திய நாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெருக்குவாரங்களை ஆரம்பித்துக் கொண்டிருந்தன. "தான் பிடித்த கம்பளிச்சாக்கை விட முடியாதவன்" போல சதாம் ஹுசேயின் குவைத்தை தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டான்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப் பட்ட குவைத்தை கடந்த காலங்களில் ஈராக் உரிமை கொண்டாடி வந்துள்ளது என்பது இப்படியான ஒரு அரசை கட்டிக்காப்பதற்கு ஒரு வருடத்திற்கு 20 பில்லியன் டாலர்கள் தேவைப்பட்டது; எண்ணெய் வருமானத்தைக் கழித்துக் கொண்டாலும் 10 பில்லியன் டாலர்கள் உடனடியாக தேவைப்பட்டது. இத்துடன் நாட்டில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்வர்களுக்கான புனர்வாழ்வும், வெளிநாட்டுக் கடன்களும் சேர்கப்படவேண்டும்.

அராபிய நாடுகளும் மேற்கு நாடுகளும் மேலும் ஈராக்குக்கு கடன்களைக் கொடுக்கும் விருப்பத்தில் இருக்கவில்லை.

அராபிய நாடுகள் கடன் கொடுக்க வேண்டுமென சதாம் ஹுசேயினால் மிரட்டப்பட்டன! பத் அரசு 30 பில்லியன் டாலர்கள் கடனாகத் தர வேண்டுமென மிரட்டப்பட்டது.!! பலன் கிடைக்கவில்லை.

குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவும் அதன சகபாடிகளும் ஈராக் நிபந்தனையின்றி குவைத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருந்தன

இந்த சவாலை எதிர் நோக்குவதற்காக ஈரானுடன் தனக்கிருந்த பகைமையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டியதும் ஈராக்குக்கு அவசியமாகியது. ஈரானிய அரசாங்கத்தின் கோரிக்கைகளின் அடிப்படையில் தமக்குள் இருந்த யுத்தநிலமையை முடிவுக்குக் கொண்டு வந்ததுடன், 1980ல் நிராகரித்த (யுத்தத்திற்கு காரணமாகவிருந்த) 1975 அல்ஜீரில் ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொண்டான். ஈரானிய முல்லாக்களின் அரசாங்கம் சந்தோஷத்துடன் இவைகளை ஏற்றுக் கொண்டது.

பெரிய சாத்தானான அமெரிக்கா ஈரானை தனது பக்கம் இழுக்க கொடுக்க முயன்ற "ரொட்டித் துண்டுகள்" எந்த வித பயனையும் அளிக்கவில்லை.

## படையெடுப்பு ஏன்?

உலக ஏகாதிபத்திய நாடுகள் "குவைத் ஆக்கிரமிப்பு" விடயத்தில் பாரியொதொரு முற்றுகையை ஏற்படுத்தியது ஏன்?

குவைத்திலுள்ள எண்ணெய் அவர்களுக்குச் சொந்தமானதுமல்ல. மறுபுறத்தில் ஈராக்குக்கும் குவைத்துக்கும் இடையில் எண்ணெய் விலைகுறைப்பு சம்பந்தமாகவே அபிப்பிராய பேதம் எழுந்ததாகவும் சொல்லப்படுகிறது! எண்ணெய் விலையைக் கூட்டுவதற்கு OPEC நாடுகள் உற்பத்தியை கட்டுப்படுத்தினாலே போதுமானது. குவைத் எண்ணையை விற்கும் நோக்கத்துடனேயே ஈராக் அதனை ஆக்கிரமித்தது. எண்ணையை விற்காமல் ஈராக்குக்கு அதற்கு தேவையான பணம் கிடைததருக்க முடியாது! உற்பத்தியை குறைப்பது அதன் நோக்கமல்ல.

## சர்வதேசட்டமீறல் என்னும் புலுடா!

குவயத் மீது ஈராக் ஆக்கிரமிப்புச் செய்தது சர்வதேச சட்டத்தை மீறும் செயல் எனவும் ஐக்கிய நாடுகள் சபை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடமைப்பட்டுள்ளதெனவும் அமெரிக்காவும் அதன் நண்பர்களும் நியாயம் கற்பிப்பது வெறும் புலுடாவேயாகும். கடந்த இருபத்தைந்து வருடங்களுக்குள் ஏகாதிபத்தியத்தின் ...பிள்ளைகள் செய்த ஆக்கிரமிப்புகள் ஒன்று இரண்டல்ல.

சில உதாரணங்கள்: இருபத்தி மூன்று (23) வருடங்களாக இஸ்ரேல் அராபிய பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது, சில பகுதிகளை இஸ்ரேலுடன் இணைத்துக் கொண்டும் விட்டது; 1971ல் ஷா மன்னன் (ஈரான்) அராபியாவுக்குச் சொந்தமான வளைகுடாத் தீவுகளை ஈரானுடன் இணைத்துக் கொண்டான்; 1975ல் இரண்டாவது ஹசன் மேற்கு சகாராவை மொரொக்கோவுடன் இணைத்துக் கொண்டான்; இப்படி பல.

மறுபுறத்தில் இன்று கூக்குரலிடும் ஏகாதிபத்திய நாடுகள் எத்தனை நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டன என்பது "காலனி" ஆட்சிகால வரலாறு. சமீபகாலத்தில்



அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமில் செய்த அழிவுகள், பனாமாவில் படுகொலைகளுடன் நடத்திய ஆக்கிரமிப்பு; துருக்கியின் சைப்பரஸ் மீதான ஆக்கிரமிப்பு; தென் அங்கோலா மீது தென் ஆபிரிக்காவின் படையெடுப்பு; இஸ்ரேலின் லெபனான் மீதான ஆக்கிரமிப்பு; இவை எல்லாவற்றிற்கும் ஐக்கியநாடுகள்சபை அவசர நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை!

<u>இந்த முற்றுகைக்கான காரணம் ஏகாதிபத்திய நாடுகளின் நலன்களின் அடிப்படையில் அமைந்திருப்பதை நாம் இனம் காணவேண்டும்.</u>

இன்று கிழக்கு மேற்கு (ருசிய – அமெரிக்க) ...ச்ச வார்த்தைகளின் விளைவால யுத்தக் கெடுபிடி தளர்த்தப்பட்டுள்ளதால, மேற்கு நாடுகளில் ஆயுதச் செலவினங்கள் குறைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன.

ஆனால் இன்று முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் பின்னடைவுகளில் இலாபங்களைப் பாதுகாப்பதற்கு மக்களின் சமூகநலச் செலவுகளை குறைப்பதும் ஆயுத உற்பத்தியைப் பெருக்குவதும் அத்தியாவசியமாகிவிட்டது.

அமெரிக்கா வருடத்திற்கு 300 பில்லியன் டாலர்களை கடன்களுக்கு வட்டியாக மட்டும் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. இந்தத் தொகை, அந்த நாடு மக்களிடமிருந்து வரிகள் மூலம் பெறும் வருமானத்தில் அரைப்பங்காகும்! அமெரிக்கா தன்னுடைய பொதுக் கடன்கள் 1994ல் 4 றில்லியன்[2] டாலர்களாக உயரும் ஆபத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலமைகளில் வரிகளை உயர்த்துவதும் சமூகநலச் செலவுகளைக் குறைப்பதும் புஷ் அரசாங்கத்திற்கு தவிர்க்க

---

**2** பத்துலட்சத்தை மும்முறை தன் பெருக்கம் செய்யக்கிடைக்கும் எண். (1,000,000,000)$^3$



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாததாகிவிட்டது. இதற்கு ஒரு வெளிக் காரணத்தைத் தேடிக் கொண்டிருந்த அமெரிக்காவிற்கு சதாம்ஹுசேனின் குவைத் ஆக்கிரமிப்பு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

இன்று சதாம்ஹுசேன் போன்ற ஒரு கிட்லரினால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தினால் அமெரிக்கா பொருளாதாரப் பின்னடைவுக்குள்ளாகிறது என்றும், அதற்காக சமூக நலச் செலவுகள் குறைக்கப்பட்டு, வரிகளும் உயர்த்தப்படுகின்றன எனப் பிரசாரம் செய்யலாம்.

யுத்தத்தினால் ஏற்படும் ஆயுத உற்பத்திகளினால் அமெரிக்க பொருளாதாரமும், அமெரிக்க, பிரித்தானிய எண்ணெய்ப் பல்தேசிய கம்பனிகளும் இலாபங்களைப் பெறும். அமெரிக்க ஆளும்வர்க்கம் தம்மை ஸ்திரமாக்கிக் கொள்ளலாம்.

## ஏகாதிபத்திய போட்டி.

அடுத்து ஏகாதிபத்தியக் கூடாரத்தில் ஏற்பட்டுவரும் முரண்பாடுகளுக்குள் அமெரிக்கா தனது மேலாண்மையைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது.

1960களிலிருந்து அமெரிக்கா தனது பொருளாதார மேலாண்மைக்காக ஜப்பானுடனும் மேற்கு ஐரோப்பா நாடுகளுடனும் போட்டியிடும் நிலைமைகள் உருவாகின. சமீப காலம் வரை ஜப்பான் ஏகாதிபத்தியப் பொருளாதார தலைமையை எடுத்துவிடும் என்றும் நம்பப்பட்டது. ஆனால் 1989ல் இருந்து இந்தப் போட்டியில் ஜேர்மன் பொருளாதாரம் வெற்றி காணக்கூடிய எல்லாச் சாதகமான நிலமைகளும் உருவாகியிருக்கின்றன. தச்சரின் வர்த்தக அமைச்சர், ஹெல்முட்ஹோலை "கிட்லர்" என வர்ணிக்குமளவுக்கு இந்த விரோதங்கள் வளர்ந்து வருகின்றன.

இருந்தும் ராணுவரீதியாக அமெரிக்காவே இன்றும் ஏகாதிபத்திய நாடுகளுக்குத் தலைமை தாங்குகின்றது. அந்த ராணுவ பலத்தினால் தனது மேலாண்மையை வலியுறுத்த அது முயலுகின்றது.

"ஏகாதிபத்திய நலன்களைக் காக்கக் கூடியவர்கள் நாங்கள் தான். எமது நடவடிக்கைகளினால் நன்மை பெறும் நண்பர்கள் எமக்கு வியாபாரத்தில் உதவ முன்வர வேண்டும்" என்று – ராணுவநடவடிக்கைக்கும் வியாபார இலாபத்திற்கும் தொடர்பு வைத்து ஜனாதிபதி புஷ் பேசியிருக்கிறார்!

## குவயத் மக்களின் சுயநிர்ணயஉரிமை?

குவைத்தின் சுயநிர்ணய உரிமையையும், அராபிய நாடுகளையும் காப்பாற்றத்தான் இந்த முற்றுகை என்பதிலும் எந்த உண்மையும் கிடையாது.

இன்று "குவைத்"தாக இருக்கும் பகுதி, ஒட்டமான் (துருக்கி) சம்ராஜயத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1756ல் அல்சபா பரம்பரையைச் சேர்ந்த ஒருவன் அந்தப்பகுதியின் தலைவனாக்கப்பட்டான். 1899ல் அதன் (எமீர்) தலைவனுடன் பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஒரு ஒப்பந்தத்தை எழுதி குவைத் பகுதியை பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாக்கிக் கொண்டது. ஒட்டமான் அரசு இந்தப் பகுதியை பஸரா(தென்ஈராக்) உடன் இணைக்கவும் பிரித்தானியாவை வெளியேற்றவும் முயற்சித்தது.

1938ல் குவைத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டு, 1946ல்


www.tamilarangam.net

இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1961ல் பிரித்தானியவின் நேரடிக் கட்டுப்பாடு நீக்கப்பட்டு, குவைத் "சுதந்திரம்" பெற்ற பொழுது ஈராக் குவைத்தை தன்னுடன் இணைத்துக் கொள்ள முயன்றது. பிரித்தானிய ராணுவம் இதைத் தடை செயதது; குவைத் ஒரு தொகைப் பணத்தை ஈராக்கிற்குக் கொடுத்ததன் பின்பு தனி நாடாக இருக்க ஈராக்கினால் அனுமதிக்கப்பட்டது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்ட இந்த நாடு "சுதந்திரம்" பெற்ற பொழுது அதன் சனத் தொகை 300,000 ஆக இருந்தது. (இன்று 550.00). இன்றைய குவைத்தின் சனத்தொகையில் 40%மானவர்களே அதன் பிரஜைகளாக இருக்கின்றனர்! அந்த 40%த்தில் 10% [illegible]ளாருக்கு மட்டும் தான் வாக்குரிமை உண்டு!! அவர்களுக்கு 75 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு பாராளுமன்றம் உண்டு. 25 அங்கத்வர்களை எமீர் நியமிப்பார். மிகுதிப்பேர்களை வாக்குரிமை பெற்ற 10% "மக்கள்" தெரிவு செய்வார்கள்.

இந்த முறையில் குவைத்திலுள்ள பெரும்பான்மை மக்களுக்கு அரசியலில் எந்த விதமான உரிமையும் இல்லாத நிலைமையே நிலவுகின்றது." இவர்களின் சுயநிர்ணய உரிமைக்காக" அமெரிக்கா ராணுவ முற்றுகையிட்டிருக்கின்றது என்று சொல்வது வெறும் கட்டுக்கதையாகும்.

மறுபுறத்தில் அராபியநாடுகளினதும் குவைத்தினதும் ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்திய மூலதனத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டனர். அவர்களுடைய நாடுகளும் அரசுகளும் (மூன்றாமுலக) சார்புமுதலாளித்துவ பொருளாதார நாடுகள் போலவே இருந்தாலும், எண்ணெய் மூலவளத்தினால் அராபிய ஆளும்வர்க்கங்களுக்குக் குவிகின்ற மூலதனம் ஏகாதிபத்திய நாடுகளிலேயே முதலீடு செய்யப்படுகின்றது.

குவைத் 100 பில்லியன் டாலர்களை தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகளில் முதலீடு செய்திருக்கின்றது. ஜேர்மனியில்; டயம்லர் (14%), மெட்டால்கெசெல்சாப்ற்(20%), ஹோஹெஸ்ற் (20%) ஆகியநிறுவனங்களிலும்: இங்கிலாந்தில்; மிட்லணட்பாங் (10.2%), எண்ணெய் பல்தேசியக்கம்பனியான(BP) பிரிட்டிஷ்பெற்றோலியம் (14%) போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவில் குவைத்தின் முதலீடு 50 பில்லியன் டாலர்களாகும்.



சவுதிஅராபியா, குவைத், குடார், ஐக்கிய அராபியநாடுகள் ஆகியவற்றின் வெளிநாட்டு முதலீடுகள் 250 பில்லியன் டாலர்கள் மட்டில் இருக்கலாம். இந்த முதலீடுகளினால் பெறப்படும் இலாபங்கள் அராபிய மக்களுக்காகப் பயன்படுவதில்லை. அவை மீண்டும் வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகளிலேயே முதலீடு செய்யப்படுகின்றன.

இந்த அராபிய ஆளும்வர்க்கங்கள்

www.tamilarangam.net

ஏகாதிபத்திய நாடுகளினால் "கறவைப்பசுக்கள்" போல வளர்த்தெடுக்கப்பட்டு, பதுகாக்கப்படுகின்றன. இந்த எமீர்கள் மக்களின் நலன்களைக் கருதாது தமது சுகபோகங்களுக்காகவே ஆட்சியில் இருக்கின்றார்கள். இந்த முதலீட்டாளர்களை காப்பாற்றுவதைத் தவிர வேறு எந்த மக்களின் சுயநிர்ணய உரிமையையும் பாதுகாக்கும் நோக்கம் ஏகாதிபத்திய நாடுகளுக்குக் கிடையாது.

இந்தக் காரணங்களுடன், மேற்காசியாப் பகுதியில் தமது நேரடிக்கட்டுப்பாடில்லாமல் அரசியல் ரீதியாக இயங்கக் கூடிய ஒரு பிரதேச அரசு உருவாகுவதையும் ஏகாதிபத்திய நாடுகள் விரும்பவில்லை. இதனால் ஈராக் அரசை சி.ஐ.ஏ. குழ்ச்சியினால் கவிழ்ப்பதற்கு அவர்கள் முயற்சி கைகூடிடாத பட்சத்தில் நேரடி ராணுநடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாதிருக்கும்

இதற்கு எதிராகவும் பல தடைகள் உண்டு. நேரடிப் போரில் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்_ ஏமீர்களுக்காக வெள்ளையர்கள் இறப்பதா ? என்ற சாதாரண மக்களின் கேள்விகள். ஐரோப்பிய தொழிலாளர்களின் எதிர்ப்புக்கள்.

நேரடியான தரைமோதல்களில் ஏறபடக்கூடிய உயிரிழப்புக்களைத்தவிர்க்கவும், ஈராக்கின் பலவீனத்தைப்பாவிக்கவும், அமெரிக்காவின் புதிய "பம்மர்"களை பரிசோதிக்கவும் அமெரிக்க ஜனரல்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆகாயத்தாக்குதலை ஈராக் தாக்குப்பிடிக்க முடியாது. ஆனால் மற்றைய ஏகாதிபத்திய நாடுகளுக்கு அந்த தேவை உண்டா? பிரானஸ் ஈராக்கில் பெருமளவு முதலீடு செய்துள்ளது. அந்த நாடு அதிகளவு சேதமடைந்து தனது கடன்கள் மீளப் பெற முடியாமல் போவதை அது விரும்பாது!

விமானத்தாக்குதல்கள் ஈராக்கில் விளைவிக்கும் உயிர்ச்சேதங்கள் அராபிய மக்கள் மத்தியில் பாதூரமான தாக்கங்களை ஏற்படுத்தும். அவர்களின் எழுச்சியின் தாக்கமும், அராபியத்தலைமைகளின் ஸ்திரமின்மையும் ஏகாதிபத்திய நாடுகளை சிந்திக்க வைக்கின்றன. இஸ்ரேல் படையினர் 21 பாலஸ்தீனியர்களைக் கொலை செய்ததை அடுத்து ஏற்பட்ட நிகழ்வுகள், அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்திருக்கினறது.

ஏகாதிபத்தியம் முற்றுகை நிலையைத் தொடருகின்றது. ஏகாதிபத்தியத்தின் இந்த நடவடிக்கையை யாராலும் நியாயப்படுத்தவோ, ஆதரிக்கவோ முடியாது அதற்கெதிராக குரல கொடுப்பதே நியாயமாகும்.


## அறிமுகம்

சக்தி

கலை இலக்கிய,சமூக விஞ்ஞான காலாண்டிதழ்

சந்தாவிபரம்: (ஆண்டு)

ஸ்கண்டினேவிய நாடுகள்- NKR 60

ஏனைய நாடுகள் - NKR 70

முகவரி:

"SAKTHI",
boks 127,
1432 AAS-NLH,
NORWAY.

சரிநிகர்


இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின மாதப் பத்திரிகை.

வருட சந்தா- 15 டொலர்கள்

முகவரி: சரிநிகர்
MIRJE
No:6 Aloe Avenue,
Colombo-3,
Srilanka.

www.tamilarangam.net

# நினைவைத் தொலைத்தவன்



கடிகார அருட்டலில்
கண் விழித்தேன்.

ஜன்னலில் பார்வை மோத
காலையும் சோகமாய்.

குழாயைத் திருகி
தண்ணீரை முறித்து
வழமையை நாடி
பருத்தி செம்மறி
ஆடை அணிந்து
படிக்கட்டில் இறங்கி
தெருவில் நிமிர்ந்தேன்.
பனிப்புகார் என் மீது
படர்ந்து போக
தேகம் கூசும் குளிர்
பச்சையாய் நிழல் தந்த
மரங்கள் இன்று
நிர்வாணமாய்.
சூடாய் வந்த
என்
மூச்சு
மீசையில் கல்லாய்
உறைந்தது
யாழ்ப்பாண நகரின்
இணுவில் எனும்
இனிய குடில்
ஓடியாடி விளையாடிய
செம்மண்ணின் புழுதி-
நெஞ்சு கனக்கும்
சோகம்

அம்மா தரும் தேனீர்
சர்க்கரை இல்லாதும்
இனிக்கும்

கந்தையா வளவு எனும்
பனைமரக்கூடல்
அருகில் சிறுவடலி
தொடர்ந்தும் குடில்கள்
தோட்ட வெளிகள்
ஆடுகள்வளர்த்தும்
மாடுகள் மேய்த்தும்
புகையிலை நாட்டி
தண்ணீர் வார்த்தும்
கல்லூரி வாழ்வும்
டியூற்றரி என்றும்
இனித்த அந்த நாட்கள்

கோவில்கள் யாவும்
பகல் இராத்திருவிழா என்றும்
நீட்டி நிமிர்ந்து
உறங்கிய நாட்கள்
இந்தக் குளிரிலும்
நினைவில் சுடும்.

இணுவில் மனோகரன்

www.tamilarangam.net


"ஸ்ரீலங்காவில் காணாமற்போனவர்களின் நண்பர்கள்" என்ற அமைப்பினால் லண்டனில் வெளியிடப்பட்ட சுவரொட்டி.

# THE BUTCHER OF SRI LANKA



## THIS MAN HAS PRESIDED OVER A GOVERNMENT WHICH HAS

- SUMMARILY EXECUTED OVER 100,000 PEOPLE
- ORGANISED DEATH SQUADS TO ELIMINATE POLITICAL OPPONENTS
- AERIAL BOMBED RESIDENTIAL AREAS KILLING TENS OF THOUSANDS
- REFERRED TO THE AMNESTY INTERNATIONAL AS A TERRORIST ORGANISATION



victims of government death squads

IF THIS DISGUSTS YOU

ASK YOUR MEMBER OF PARLIAMENT WHY BRITISH TAX PAYERS' MONEY IS BEING USED TO PROP UP THIS BRUTAL AND CORRUPT REGIME
— JOIN OUR CAMPAIGN

Write to: FRIENDS OF THE DISAPPEARED IN SRI LANKA, BM Box 3018, London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்